RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX
Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி! குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 30, 24 நவம்பர 2023 இதழ்:- 28

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance
100% Refund

மந்தையாய் வாழ்ந்த எந்தையர் வாழ்வில்
விந்தைகள் புரிந்து சிந்தையைக் கவர்ந்த
எங்கள் கரிகாலனே!
ஈழத்து மனிதனை தமிழனாய் உலகுக்கு
தரம் பிரித்துத் தந்த தலைவனே!
தமிழர் அம்மணத்தை மறைக்க
சோழர் கொடியில் ஆடை தந்தவனே!
தமிழீழத்தின் ஒரு பிடி மண்ணும்
பகைவனைக் கொல்லும்
அதிசயம் நிகழ்த்தியவன் நீ!
தமிழுக்குத் தோற்றமில்லை! - உனக்கு
வயதுமில்லை! மறைவுமில்லை! தமிழோடு சேர்ந்து
உன் புகழ் வாழ வாழ்த்துகின்றோம்!
வாழ்க நீ! தமிழர் நாம் வாழ்வதற்கே!

அன்புடன்
T.K.பரமேஸ்வரன் -ஈழநாடு






## நல்லூரில் 24,379 மாவீரர்களின் பெயர்கள் தாங்கிய கல்வெட்டுகளுடன் மாவீரர் நினைவாலயம் திறப்பு!

போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்!
உறவுகளே! நவம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
24/7 365
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
Phone: (416) 321-6110
MORTGAGE ALLIANCE
1-877-366-3487

THINKING OF

# SELLING OR BUYING A HOME?

## www.AgentSiva.com

*Your neighborhood sales representatives*



**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

**Team SIVA**
WILL BRING THE BEST RESULTS!

**Piravien Siva**
B.Comm. Sales Representative
**Dir: 647-221-5220**
piravien@gmail.com




20 Years Real Estate Experience

**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply

HOMELIFE HIGHER STANDARDS

Bus: 416.298.3200
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P 4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY


### Simcoe St N & Conlin Rd

**Oshawa** **$279,000**
Bachelor/Studio: 1 Washrooms: 1
Condo Steps To The University


### Eglinton / Mccowan

**Scarborough** **$499,900**
Bedrooms: 2 Washrooms: 2
Convenience living on Eglinton line

### Warden Ave / Enterprise Blvd


**Markham** **$749,000**
Bedrooms: 1+1 Washrooms: 2
Direct Access to Hwy 7 & 407

### Dundas/Hurontario St

**Mississauga** **$599,000**
Bedrooms: 3 Washrooms: 2
High Demand Layout Within Building

### Warden/Steeles

**Scarborough** **$760,000**
Bedrooms: 2+1 Washrooms: 2
Over 1900 Sqft Of Living Space

### Main St. E & Russell St.

**Southgate** **$799,999**
Bedrooms: 4 Washrooms: 3
Detached Home W/3063 Sq Ft

### Kennedy Rd & Bovaild Dr. E

**Brampton** **$1,100,000**
Bedrooms: 3 Washrooms: 3
recently renovated, sep. entrances

### Eglinton Ave & Danforth Rd


**Toronto** **$1,150,000**
Bedrooms: 4 Washrooms: 4
Low Maintenance Fees.

### Fletcherscreek Blvd/Bovaird Dr

**Brampton** **$3,500**
Bedrooms: 3 Washrooms: 4
Lots Of Upgrades!

### Markham Rd & Lawrence Ave
FOR LEASE

**Scarborough** **$2,000**
Basement for lease
Close To TTC, Shopping & 401.

### Meadowvale / Sheppard
FOR LEASE

**Scarborough** **$1,[illegible]000**
Bedrooms: 1 Washrooms: 1
Great neighbourhood

### 9th Line/14th Ave

**Markham** **$1,689,000**
Bedrooms: 4+1 Washrooms: 4
Newly renovated luxury home

Looking for more house?

# www.AgentSiva.com

WILL BRING THE BEST RESULTS!

## PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
**105 DINSDALE DR**
**WOODBRIDGE - ON**
**L4H 2M4 - CANADA**

**416 841 9600 / 905 653 3000**
**eelanadu1993@ gmail.com**

# நல்லூரில் 24,379 மாவீரர்களின் பெயர்கள் தாங்கிய கல்வெட்டுகளுடன் மாவீரர் நினைவாலயம் திறப்பு!

மாவீரர்களின் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டு மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் முன்னாள் போராளிகளின் பங்கேற்புடன் யாழ்ப்பாணம் நல்லூரில் 21 நவம்பர் 2023 செவ்வாய்க்கிழமை மாலை திறந்து வைக்கப்பட்டது.

ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தில் தம் இன்னுயிரை ஈகம் செய்த போராளிகளை நினைவுகூரும் மாவீரர் வாரம் ஆரம்பமானது. இதனையொட்டி நல்லூரிலுள்ள தியாக தீபம் திலீபனின் நினைவாலயத்திற்கு முன்பாக அமைக்கப்பட்ட மாவீரர்களின் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டு திறந்து வைக்கப்பட்டது. இதன்போது பொதுச்சுடரினை மூன்று மாவீரர்களின் தாயாரான சிவபாதம் இந்திரவதி ஏற்றி வைத்து மலரஞ்சலி செலுத்தினார்.

1982 கார்த்திகை 27 முதல் 2009 வைகாசி 18 வரையான காலப்பகுதியில் தாய் மண்ணின் விடியலுக்காய் வித்தாகியவர்களில் கிடைக்க பெற்ற முடிந்த 24,379 மாவீரர்களின் பெயர்களினை உள்ளடக்கிய கல்லறைகளையும் சில தகவல்களையும் உள்ளடக்கி நினைவாலயம் உருவாக்கப்பட்டுள்ளது.



இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி விக்னேஸ்வரன், முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், முன்னாள் யாழ் மாநகரசபை முதல்வர் வி.மணிவண்ணன், முன்னாள் மாநகரசபை உறுப்பினர்கள், மாவீரர்களின் பெற்றோர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# நமக்காகப் போராடியவர்களை நாம் கௌரவிப்போம் சுமந்திரனுக்கு ஞானம் பிறந்து பாராளுமன்றத்தில் பேச்சு!



எங்களுக்கு இது ஒரு முக்கியமான வாரம். எங்களுக்காகப் போராடி மடிந்தவர்களை நாங்கள் கௌரவித்து வணங்கும் வாரம்இதுவென நாடாளுமன்றத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

குறித்த விடயத்தை நாடாளுமன்றத்தில் அவர் 22 நவம்பர் 2023 கூறியுள்ளார். இது குறித்து அவர் நாடாளுமன்றத்தில் மேலும் தெரிவிக்கையில், இது ஒரு முக்கியமான வாரம். எங்களுக்காகப் போராடியவர்களுக்காக நாம் அவர்களை கௌரவிக்கும் வாரம் இது. அந்த வகையில் அதை வெளிப்படுத்துவதற்கு நான் தயங்க மாட்டேன். ஏன் அவர்கள் எங்களுக்காகப் போராடினார்கள்? ஏனென்றால் தேசிய நீரோட்டத்தில் இருந்து, வாழ்க்கையில் இருந்து, (உங்களால்) நாம் தூக்கி வீசப்பட்டோம். எங்களுக்கு வேறு வழி இருக்கவில்லை. நாம் அந்தச் சிந்தனையில் இப்போது இல்லை. ஐக்கியப்பட்ட பிளவுபடாத, பிரிக்கப்படாத ஒன்றுபட்ட நாட்டுக்குள் சேர்ந்து வாழ்வதற்கு நாங்கள் இன்னும் தயாராகவே இருக்கின்றோம் என்பதை நாம் மிகத் தெளிவாக வெளிப்படுத்தி இருக்கின்றோம்.

அதற்கு உங்கள் பிரதிபலிப்பு எப்படி இருந்தது? எப்படி இருக்கின்றது? முடிவு உங்களின் கைகளில். நீங்கள் தான் தீர்மானிக்க வேண்டும். எங்களை எப்போதும் இப்படி தனித்து நீங்கள் ஒதுக்கி விட முடியாது. அதிக எண்ணிக்கை உங்கள் பக்கம் இருப்பதால் மட்டும் உங்கள் கருத்து சரி என்று ஆகிவிடாது. அத்தகைய அதிக எண்ணிக்கை பல சமயங்களில் உங்களைத் தவறானவர்களாக செயற்பட வைத்து விடும். நீங்கள் உங்கள் எண்ணிக்கையை வைத்து எங்களை முற்றாக அழித்து விடலாம் என்று நினைக்கின்றீர்கள். அதைத் தான் இந்தச் சபையிலும் கூட நீங்கள் செய்கின்றீர்கள் என தெரிவித்துள்ளார்.

# ஸ்ரீலங்கா அமைச்சருக்கு பிரிட்டன் தீவில் சொத்து! புலனாய்வு ஊடகவியலாளர்கள் சர்வதேச அமைப்பு தகவல்!

ஸ்ரீலங்காவின் பொது பாதுகாப்பு அமைச்சர் டிரன் அலஸ் பிரித்தானிய வேர்ஜின் தீவுகளில் அமைந்துள்ள இரண்டு வெளிநாட்டு நிறுவனங்களின் உரிமையாளராகவும் இயக்குநராகவும் பதிவு செய்யப்பட்டுள்ளதாக புலனாய்வு ஊடகவியலாளர்களின் சர்வதேச கூட்டமைப்பு வெளிப்படுத்தியுள்ளது.

சர்வதேச புலனாய்வுப் பத்திரிகையாளர்கள் கூட்டமைப்பு வெளியிட்டுள்ள சமீபத்திய பண்டோரா பேப்பர்ஸ் அம்பலப்படுத்தல் மூலம் இது தெரிய வந்துள்ளது. சர்வதேச புலனாய்வுப் பத்திரிகையாளர் கூட்டமைப்பு 100 நாடுகளைச் சேர்ந்த 280 பத்திரிகையாளர்களைத் தொடர்பு கொண்டு அவர்களின் சமீபத்திய வெளிப்பாடு தொடர்பான தகவல்களைச் சேகரித்தது.

ஜீலை 2017 முதல் பிரிட்டிஷ் வேர்ஜின் தீவுகளில் உள்ள பான்ஹாம் வென்ச்சர்ஸ் லிமிடெட் மற்றும் டெப்ரோம்டன் பிராப்பர்டீஸின் உரிமையாளர் மற்றும் இயக்குநராக டிரன் பிரசன்னா கிறிஸ்தோபர் அலஸ் இருந்து வருவதாக சர்வதேச புலனாய்வுப் பத்திரிகையாளர்கள் கூட்டமைப்பு வெளிப்படுத்துகிறது. உலகப் பணக்காரர்கள் வரியில்லாப் பணம் மற்றும் வெளியிடப்படாத கறுப்புப் பணத்தை முதலீடு செய்வதற்கான முதலீட்டுத் தலமாக வேர்ஜின் தீவுகள் அறியப்படுகின்றன.

மேலும் இலங்கையானது நாட்டிற்கு வெளியே மூலதனத்தை கடுமையாக கட்டுப்படுத்தும் நாடாக இருப்பதால், இலங்கையர்கள் வெளிநாட்டு நிறுவனங்களில் முதலீடு செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் இலங்கையின் பொது பாதுகாப்புக்கு பொறுப்பான அமைச்சர் இரண்டு வெளிநாட்டு நிறுவனங்களில் பணத்தை முதலீடு செய்து அவற்றிலிருந்து நன்மைகளை பெற்றுக் கொண்டமை சர்ச்சைக்குரிய விடயமாகும்.

இந்நிலையில் பிரித்தானியாவின் லண்டனில் உள்ள பொதுப்பாதுகாப்பு அமைச்சருக்குச் சொந்தமான இரண்டு வீடுகளின் புகைப்படங்களை ரொய்ட்டர்ஸ் ஊடகவியலாளர் ரங்கஸ்ரீ லால் செய்தி ஒன்றின் மூலம் பகிரங்கப்படுத்தியுள்ளார்.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**


# இலங்கை நெருக்கடிக்கு ராஜபக்ஷாக்களே காரணம்! நான் ராஜபக்ஷாக்களின் பாதுகாவலன் அல்ல - ரணில்

இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு ராஜபக்சக்களே பொறுப்பு என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்திய ஊடகமான Firstpost க்கு அளித்த பிரத்தியேக பேட்டியின் போது தெரிவித்துள்ளார். .

ராஜபக்சக்கள் தமது செயற்பாடுகளுக்காக மன்னிப்புக் கோர வேண்டுமா என வினவிய போது அது அவர்களுக்கே உரியது எனவும், அவர்கள் அவ்வாறு செய்துள்ளதாக தாம் நம்புவதாகவும் தெரிவித்த ஜனாதிபதி விக்கிரமசிங்க

அவர்களின் காலத்தில் நெருக்கடி ஏற்பட்டது. மகிந்த ராஜபக்ச பிரதமர் பதவியையும், கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதி பதவியையும் இராஜினாமா செய்தபோது, ஒட்டுமொத்த அரசியல் அமைப்பும் சரிந்தது. நாட்டை பொறுப்பேற்க வேண்டிய எதிர்க்கட்சிகள் பொறுப்பில் இருந்து நழுவின என்றும் தெரிவித்துள்ளார். தான் ராஜபக்ஷக்களை பாதுகாப்பதாக விமர்சகர்களின் கருத்துக்கள் தொடர்பில் கருத்து தெரிவித்த ஜனாதிபதி விக்கிரமசிங்க, அந்த கூற்றுக்களை மறுத்து நான் ராஜபக்சக்களை பாதுகாக்கவில்லை. . ஆனால் அதன் பிறகு நாட்டை பொறுப்பேற்க வேறு யாரும் இல்லை. இப்போது விமர்சிப்பவர்கள் பொறுப்பில் இருந்து ஓடியவர்கள் என்றார்

அண்மையில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்தநாள் கொண்டாட்டங்களில் கலந்து கொண்டமை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த ஜனாதிபதி, தானும் மகிந்த ராஜபக்சவும் எப்போதும் பிறந்தநாள் வாழ்த்துக்களை பரிமாறிக் கொள்வதுடன் பிறந்த நாளையும் கொண்டாடுவது பொதுவான நடைமுறை என தெரிவித்துள்ளார். விமர்சகர்கள் கூறுவது போல் தாம் ராஜபக்சக்களுக்கு பினாமி அல்ல என்று கூறிய ஜனாதிபதி விக்கிரம சிங்க, தற்போது ராஜபக்சக்களின் கட்சி பிளவுபட்டுள்ளதையும் வெளிப் படுத்தினார்.

ஒரு பாதி சமகி ஜன பலவேகயவுடனும், மற்ற பாதி என்னுடனும் வேலை செய்கின்றன. ஒட்டுமொத்த ராஜபக்ச கட்சியும் எனக்கு ஆதரவாக இருக்கிறதா என்று கேட்டால் இல்லை என்று தான் சொல்வேன். சஜித் பிரேமதாசவுக்கு முழு சமகி ஜன பலவேகய ஆதரவளிக்கிறதா என்று கேட்டால் இல்லை என்றே சொல்வேன். அனைத்து கட்சிகளும் பிளவுபட்டுள்ளன என்றார்.

நாட்டை நெருக்கடியிலிருந்து மீட்பதற்கு அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்படுமாறு தான் வேண்டுகோள் விடுத்ததாகவும், இலங்கையின் ஜனாதிபதியாக நியமிக்கப்படுவதற்கான பெரும்பான்மையைப் பெற்றதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை இலங்கையில் உள்ள தமிழ் மக்களின் காணிப்பிரச்சனைகள் குறித்து பாரியளவில் பேசப்பட்டதாக ரணில் விக்ரமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார். வன பாதுகாப்பு திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்தினால் ஆக்கிரமிக்கப்பட்ட தமிழ் மக்களின் காணிகளை மீள அவர்களுக்கே வழங்கும் நடவடிக்கை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். இலங்கையின் 1985 ஆம் ஆண்டுக்கான வரைபடத்துக்கு ஏற்ப இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ் மக்களுக்கான தீர்வு குறித்த அரசாங்கத்தின் நடவடிக்கைகளை அண்மையில் இந்தியா விமர்சித்திருந்ததோடு, தமிழ் மக்களின் விவகாரம் தொடர்பான முன்னேற்றம் போதுமானதாக இல்லை எனவும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் தெரிவித்திருந்தது. இதனை நிராகரித்த ரணில் விக்ரமசிங்க இந்தியா இவ்வாறானதொரு கூற்றை முன்வைத்தமை குறித்து அதிர்ச்சியடைவதாகவும் தெரிவித்துள்ளார்.

எனினும் தமிழ் மக்களுக்கான தீர்வுகள் தொடர்பில் கடந்த வருடம் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை அனைவராலும் காணக்கூடியதாக இருப்பதாக அவர் கூறியுள்ளார். அத்துடன், இந்த செயல்முறையில் சில குறைபாடுகள் காணப்பட்டாலும், குறித்த செயல்முறை இடைநிறுத்தப்படாது முன்னெடுக்கப்படுமென தெரிவித்தார்.


## முகாமையாளர் தேவை

Peel பிராந்தியத்தில் உள்ள இந்து ஆலயம் ஒன்றில் முழு நேரமாகவோ அல்லது பகுதி நேரமாகவோ பணியாற்ற சைவ, இந்து நெறிகள் பற்றிய ஈடுபாடுடையவரும் கணினி சம்பந்தமாக அறிவுடையவருமான ஒருவர் தேவை. தகமைக்கு ஏற்ப ஊதியம் வழங்கப்படும். தொடர்புகளுக்கு Hmmdhurga@gmail.com தொலைபேசி 647 588 3179


## மிசிசாகா இந்து மகாசபை விசேட பொதுக்கூட்டம்

மிசிசாகா இந்து மகாசபையின் விசேட பொதுக்கூட்டம் 03 டிசம்பர் 2023 ஞாயிற்றுக்கிழமையன்று பிற்பகல் 2.30 மணிக்கு 1808 Drew Rd மிசிசாகாவில் அமைந்துள்ள ஜெயதுர்க்கா ஆலய மண்டபத்தில் இடம் பெறும். உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள். - ஆலய நிர்வாகம்




ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா – அருள்மிகு

ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

104 Rivalda Rd Northyork - On - M9M 2M8 (Weston/Sheppard)

Tel: 416.213.0110 ▪ www.shrimuththumaari.cin



ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 8.30 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்

அம்பாள் அடியார்களே!

எமது ஆலயம் புதிய முகவரிக்கு இடம் மாறியுள்ளது என்பதை அறியத் தருவதுடன் விரைவில் புதிய இடத்தில் அம்மனுக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அதேவேளை நாளாந்தம் வழமை போன்று பூஜை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன என்பதை அம்பாள் அடியார்களுக்கு அறியத் தருவதுடன் அம்பாளின் திருப்பணிக்கு உங்களால் முடிந்தளவு பங்களிப்பைச் செய்யுமாறு வேண்டுகின்றோம்.

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# மரணிக்காத தமிழர்களின் உணர்வு சுயநிர்ணய உரிமை தமிழ்த்தேசிய கொடி தினத்தில் பிரம்டன் மேயர் தெரிவிப்பு!

தமிழ்தேசிய கொடிதினம் மரணிக்காத தமிழர்களின் உணர்வு சுயநிர்ணய உரிமை சுதந்திரம் ஆகிய வற்றிற்கான போராட்டம் ஆகியவற்றை வெளிப்படுத்தி நிற்கின்றது என கனடாவின் பிரம்டன் மேயர் பட்ரிக் பிரவுண் தெரிவித்துள்ளார்

தமிழ்தேசிய கொடி தினத்தை குறிக்கும் விதத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் இதனை தெரிவித்துள்ளார். தமிழ்தேசிய கொடி தினம் சுதந்திரம் மற்றும் சுயநிர்ணய உரிமை ஆகிய வற்றிற்கான தொடரும் போராட்டம் பாரம்பரியம் மீளுந் தன்மை போன்றவற்றிற்கான குறியீடாக காணப்படுகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

33வருடாந்த தமிழ் தேசிய கொடி நாள் 2023. 21ம் திகதி சர்வதேச ரீதியில் கடைப்பிடிக்கப்படுகின்றது தமிழர்களின் சின்னமான கொடியின் முக்கியத்துவம் கொண்டாடப்படுகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையிலும் உலகளாவியரீதியிலும் தமிழர்களின் வரலாறு கலாச்சாரம் நிரந்தரமான உணர்வுகள் என்பவற்றை கௌரவிப்பதற்கான புனிதமான தினத்தை இந்த நாள் குறிக்கின்றது பட்ரிக் பிரவுண் குறிப்பிட்டுள்ளார்.

நீதி மனித உரிமைகள் சுதந்திரத்திற்காக முன்னோர்களின் அளப்பரிய தியாகத்தினை நினைவுபடுத்தும் நாளாகவும் தமிழ் கொடி நாள் காணப்படுகின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்

கனடா தமிழர்கள் தாங்கள் தத்தெடுத்த நாட்டிற்கு மிகப்பெரிய பங்களிப்பை செய்துள்ளனர் சமூகங்களை வளப்படுத்தியுள்ளனர் எதிர்கால சமூகத்தினை பொறுப்புணர்வுள்ள சமூகமாக வாழ்வதற்கு வழிகாட்டியுள்ளனர்என அவர் தெரிவித்துள்ளார்.



சர்வதேச அளவில் சட்ட கட்டமைப்புகளிற்குள் தமிழ்தேசிய கொடிநாளை கொண்டாடுவது அனைவரையும் உள்வாங்குவது பல்வேறுபட்ட கலாச்சார அடையாளங்களை அங்கீகரிப்பது ஆகியவற்றின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தியுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த தருணம் சுதேசிய மக்களின் உரிமைகளை அங்கீகரித்தல் மனித உரிமைகளிற்காக பரப்புரை செய்தல் இனஐக்கியத்தை ஏற்படுத்துதல் போன்றவற்றின் முக்கியத்துவத்தை குறிக்கும் விதத்தில் அமைந்துள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை தேசிய கொடிகளிற்கு அருகில் ஏற்றப்படும் தமிழ்தேசிய கொடி ஐக்கியம் சர்வதேச அளவில் மரணிக்காத தமிழ் மக்களின் உணர்வு என்பவற்றை வெளிப்படுத்துகின்றது எனவும் பட்ரிக் பிரவுண் தெரிவித்துள்ளார்.

# நீதிமன்றத் தீர்ப்புக்குள்ளாக்கப்பட்டவர்களால் பதுக்கி வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள் அரசுடைமையாக்கப்பட வேண்டும் - சந்திரிகா



நாடு வங்குரோத்து நிலையை அடைந்துள்ளமை தொடர்பில் நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு மிக முக்கியத்துவமுடையதாகும். குறித்த வழக்கின் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் உள்நாட்டில் மாத்திரமின்றி, வெளிநாடுகளில் பதுக்கி வைத்துள்ள சொத்துக்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து அவற்றை மீட்டு அரசுடைமையாக்க வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளார்.


காணொளியூடாக விசேட அறிவித்தலொன்றை விடுத்து இவ்வாறு வலியுறுத்தியுள்ள அவர் அதில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது நாட்டை வங்குரோத்துக்குள்ளாக்கியமை தொடர்பில் அண்மையில் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு தீர்க்கமானதாகும். நாட்டுக்காக இளம் தலைமுறையினர் எவ்வாறு சிந்தித்து செயற்பட வேண்டும் என்பதற்கு இது சிறந்த முன்னுதாரணமாகும்.

நீதிமன்றம் தண்டனை வழங்கவில்லை என்ற போதிலும் இவர்கள் நிச்சயம் தண்டனைக்கு உட்படுத்தப்பட வேண்டியவர்களாவர். எவ்வாறிருப்பினும் இவர்களிடமிருந்து நஷ்டஈட்டைப் பெற்றுக் கொள்ள முடியும். எனவே நாட்டில் கொள்ளையடித்து வெவ்வேறு நாடுகளிலும் இவர்கள் சேமித்து வைத்துள்ள பணம் மற்றும் சொத்துக்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து, அதே போன்று உள்நாட்டில் பதுக்கி வைத்துள்ள சொத்துக்கள் தொடர்பிலும் ஆராய்ந்து அவற்றை அரசுடைமையாக்கவும், மக்களுக்கு பகிர்ந்தளிக்கவும் முடியும்.

வரிகளை மேலும் மேலும் அதிகரித்து மக்களுக்கு நெருக்கடியை ஏற்படுத்துவதை விட, இவர்களால் பதுக்கி வைக்கப்பட்டுள்ள சொத்துக்களை கையப்படுத்தி அவற்றின் ஊடாக மக்களுக்கு நிவாரணங்களை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் அரசாங்கத்திடம் யோசனையொன்றை முன்வைக்கின்றேன். உலக வங்கி உள்ளிட்ட சர்வதேச நிதி நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும்.

உடனடியாக இந்த நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அரசாங்கத்திடம் கேட்டுக் கொள்கின்றேன். அமைச்சரொருவர் நீதிமன்றத்தின் தீர்ப்பினை தவறு என்று விமர்சித்துள்ளார். அதனை நான் கடுமையாக எதிர்க்கின்றேன். நீதிமன்றத்தின் தீர்ப்பினை எவராலும் விமர்சிக்க முடியாது என்றார்.

# 75 வயதில் தங்கம் வென்ற தமிழிச்சி




பிலிப்பைன்ஸ்ல் நடைபெற்ற National Masters & Seniors Athletics போட்டியில் இலங்கையிலிருந்து கலந்து கொண்ட முள்ளியவளை, முல்லைத்தீவைச் சேர்ந்த திருமதி. அகிலத்திருநாயகி (75) இரண்டு தங்கப் பதக்கங்களைப் பெற்றுள்ளதோடு ஒரு வெண்கலப்பதக்கத்தையும் பெற்றுள்ளார்.

1500m ஓட்டம் 5000m விரைவு நடை போட்டியில் தங்கப் பதக்கம் 800m ஓட்டத்தில் வெங்கலப் பதக்கம் 5000m ஓட்டத்தில் நான்காம் இடம் பெற்று ஈழத்தமிழர்களுக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

# நிலைப்பாடுகளில் தந்திரம் இருக்க வேண்டும்

இஸ்ரேல் ஹமாஸ் யுத்தத்தை தொடர்ந்து, இலங்கையில் பலரும் பலஸ்தீனத்திற்கு ஆதரவாகவும், இஸ்ரேலுக்கு எதிராகவும் குரலெழுப்பியிருந்தனர். இதில் முதன்மையானவர்கள் இலங்கை முஸ்லிம் கட்சிகளும் அமைப்புக்களுமாகும். அண்மையில், பலஸ்தீனத்திற்கு ஆதரவாக, அனைத்து முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஐ.நா.வின் இலங்கை அலுவலகத்திற்கு சென்றிருந்தனர். பொதுவாக உலகில் எந்தவொரு மூலையிலாவது, இஸ்லாமியர்கள் நெருக்கடிகளை எதிர்கொள்ளும் போதும், இலங்கை முஸ்லிம்கள் உடனடியாகவே தங்களின் குரல்களை பதிவு செய்வது வழமையான ஒன்று.

இதற்கு பின்னாலிருப்பது மனிதாபிமானமா? இதற்கும் மேலாக கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டு, இலங்கையில் இடம் பெற்ற ஈஸ்டர் தாக்குதலுக்கு பின்னால், இஸ்ரேல் இருந்ததாக வேறு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவுப் ஹக்கீம் அண்மையில் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

கர்தினால் மல்கம் ரஞ்சித்தே இதனை தன்னிடம் கூறியதாகவும் தெரிவித்திருந்தார். ஆனால் மறுதினமே, கர்தினால் மல்கம் ரஞ்சித் அதனை மறுத்திருந்தார்.

இலங்கையின் முஸ்லிம் அரசியல் கட்சிகள் எந்தக் காலத்திலும் தமிழ்மக்களின் துயரங்களுக்காக குரல் கொடுத்தவை அல்ல. முள்ளிவாய்க்கால் அவலம் தொடர்பில் என்றுமே கண்டனங்களை அவர்கள் வெளியிட்டதில்லை.

இன்று பலஸ்தீனத்திற்காக மனிதாபிமான கண்ணீர் சிந்தும் அவர்கள், தமிழ் மக்களின் நியாயங்களுடன் என்றுமே தங்களை அடையாளப்படுத்தியதில்லை. தமிழ் மக்களுக்காக பேசினால், தங்களது நலன்கள் பாதிக்கப்படும் என்னுமடிப்படையிலேயே, ஒவ்வொரு விடயங்களையும் திட்டமிட்டு முன்னெடுத்து வந்திருக்கின்றனர்.

இந்த பின்புலத்தில் நோக்கினால் அவர்களிடம் இருப்பது மனிதாபிமானம் அல்ல – அது இஸ்லாமிய சகோதரத்துவமாகும். எனவே மனிதாபிமானம் வேறு, இஸ்லாமிய சகோதரத்துவம் வேறு என்பதை, புரிந்து கொள்வதில் சிரமப்பட வேண்டியதில்லை.

இந்த விடயங்களை கருத்தில் கொண்டு தான், நமது தமிழ் தேசியர்கள் பலஸ்தீனம் தொடர்பில் அபிப்பிராயங்களை முன்வைக்க வேண்டும். பலஸ்தீனத்தை எதிர்ப்பதால் அல்லது இஸ்ரேலை ஆதரிப்பதால் தமிழ் மக்களுக்கு என்ன கிடைத்து விடப் போகின்றது – இதில் ஏன் நாம், நமக்குள் முட்டி மோத வேண்டும் – என்று ஒரு கேள்வி எழலாம்.

இந்தக் கேள்வியில் நியாயம் உண்டு ஆனால் இஸ்ரேலை எதிர்த்து, நாம் ஏன் பாலஸ்தீனத்தை ஆதரிக்க வேண்டும் அவ்வாறான நிலைப்பாட்டை எடுப்பதால், நமது மக்களுக்கு என்ன நன்மை கிடைக்கும்? ஆனால் ஒரு நிலைப்பாட்டை எடுப்பதாயின் அதனை தெளிவாக முன்வைக்க வேண்டும்.

இஸ்ரேல் என்பது வெறுமனே இஸ்ரேல் மட்டுமல்ல அது உலகளாவிய யூதர்கள் சம்பந்தப் பட்டது. அமெரிக்க வெளிவிவகாரக் கொள்கையில் 'யூத லொபி' என்று ஒன்றுண்டு. அந்தளவிற்கு அவர்கள் ஆளுமையும் செல்வாக்கும் மிக்க ஒரு சமூகம். அவ்வாறானதொரு சமூகத்தை எதிர்த்து, எதற்காக பலஸ்தீனத்தின் பக்கமாக நம்மை அடையாளம் காண்பிக்க வேண்டும்?

நாம் எடுக்கும் நிலைப்பாடுகளானது, இன்றில்லாவிட்டாலும் கூட என்றோ ஒருநாளில், நமக்கு நன்மையளிப்பதாக இருக்க வேண்டும். ஒரு வேளை நன்மையில்லா விட்டாலும் கூட, இடம்பெறும் பாதகமான நிலைமையை தடுப்பதற்காவது பயன்படலாம். வெளியுலக விவகாரமொன்றில் ஒரு நிலைப்பாட்டை எடுக்கும் போது இந்த அடிப்படையில் தான் தீர்மானங்களை எடுக்க வேண்டும்

நம்மை உலகின் முன்னால் காண்பிக்க வேண்டும். நாம் எவ்வாறு நம்மை வெளிப் படுத்துகின்றோமா அது தான் நமது உலக நிலைப்பாடாகும். நமது உலக நிலைப்பாடு எப்போதுமே தூர நோக்கம் கொண்டதாகவும், தந்திரம் மிக்க தாகவும் இருக்க வேண்டும். அவ்வாறு சிந்தித்தால் ஈழத் தமிழர்கள் பலஸ்தீனத்தின் பக்கமாக தங்களை அடையாளப் படுத்துவது சரியா அல்லது தவறா என்பதை புரிந்து கொள்ள முடியும்.

# கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வுப்பணியை நீண்ட காலத்திற்கு முன்னெடுக்க வேண்டியேற்படும்

கொக்குத்தொடுவாயில் வீதிக்கு குறுக்காகவும், வீதிக்கு அடியிலும் கூட சில வேளை மனித எச்சங்கள் இருக்க கூடும் என்ற சந்தேகமும் ஏற்பட்டிருக்கின்றது என ஜனாதிபதி சட்டத்தரணியும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

திங்கட்கிழமை 20 நவம்பர் 2023 கொக்குதொடுவாய் மனித புதைகுழி அகழ்வு பணி ஆரம்பிக்கும் இடத்தினை பார்வையிட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வு பணியானது மீளவும் திங்கட்கிழமை காலை ஆரம்பமாகி இருக்கின்றது. தற்போது விடுவிக்கப் பட்டிருக்கின்ற நிதியினை வைத்து இன்னும் இரண்டு வாரங்களுக்கு அகழ்வை மேற்கொள்ள முடியும் என கூறியிருக்கிறார்கள்.

இது பல்வேறு தளங்களிலே உடல்கள் காணப்படுகின்ற காரணத்தினாலே நீண்ட காலமாக இதனை செய்வதற்கான தேவை ஏற்பட்டிருப்பதனை தற்போது உணர்ந்திருக்கின்றார்கள். அது ஒரு பக்கம் இருக்க வீதிக்கு குறுக்காகவும், வீதிக்கு அடியிலும் கூட சில வேளை மனித எச்சங்கள் இருக்க கூடும் என்ற சந்தேகமும் ஏற்பட்டிருக்கின்றது.

ஆகையினாலே இதனை வருகின்ற நாட்களிலே பரிசீலித்து நீண்ட நாட்களாக செய்யப்பட வேண்டிய செயன்முறை என்ற அடிப்படையிலே அதற்கான நிதியை ஜனாதிபதி செயலகத்திலே இருந்து, அரசாங்க அதிபருக்கு அதனை விடுவிப்பதற்கான முயற்சிகள் இன்றிலிருந்து ஆரம்பமாக இருப்பதாகவும் அந்த நிதி விடுவிக்கப்படும் என்று கூறப்பட்டிருக்கின்றது. ஆகையினாலே இந்த செயற்பாடுகள் தற்போது சரியான முறையிலே நடைபெறுகின்றன.



ஒவ்வொரு உடல்களும் கை, கால், உடம்பு, தலை அனைத்தும் பொருந்தக்கூடிய வண்ணமாக எடுக்கப்படுகின்ற காரணத்தினால்தான் நீண்ட நேரம் இதற்கு செல்வாகின்றது. உடையாமல் கவனமாக எடுக்கப்பட வேண்டிய தேவையும் இருக்கின்றது.

ஆகையினால் ஒவ்வொரு கட்டமாக அகழ்ந்து தற்போது 17 உடலங்கள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. ஆனால் இதனை விட கூடுதலான எண்ணிக்கை இருக்கும் என்பது தெளிவாக தெரிகின்றது. அவர்களுடைய சீருடைகள் மற்றும் வேறு பல பொருட்களும் அடையாளம் காணப் பட்டிருக்கின்றது.

ஆகையினாலே எந்த காலத்தில் நிகழ்ந்திருக்கலாம் என்பதனையும் சில பரிசோதனைகளின் பின்னர் அறியக்கூடியதாக இருக்கும் என்ற நம்பிக்கை தெரிவிக்கப் பட்டிருக்கின்றது. அதற்கு சில நாட்கள் எடுக்கும் என மேலும் தெரிவித்தார்.

## வடக்கில் அனைத்து துறைசார் வளர்ச்சிக்கும் பூரண ஒத்துழைப்பு என்கிறார் எரிக்சொல்ஹெறாம்

வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸுக்கும், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் சர்வதேச காலநிலை ஆலோசகர் எரிக் சொல்ஹெய்மிற்கும் இடையிலான விசேட சந்திப்பு கொழும்பில் 21 நவம்பர் 2023 செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

வட மாகாணத்தின் இடர் முகாமைத்துவம், மக்களின் அன்றாட வாழ்வியல் நிலை, காலநிலை, பொருளாதாரம், மாகாணத்தில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தி உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் ஆளுநரால் இதன் போது சர்வதேச காலநிலை ஆலோசகர் எரிக் சொல்ஹெய்மிற்கு விரிவாக எடுத்துக்கூறப்பட்டது.



விடயங்களை கேட்டறிந்துக் கொண்ட ஜனாதிபதியின் சர்வதேச காலநிலை ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம், இலங்கை விஜயத்தின் போது, வடக்கு மாகாண ஆளுநரை முதலில் சந்திக்க கிடைத்தமையிட்டு பெருமகிழ்ச்சி அடைவதாக கூறினார். இலங்கையின் வளர்ச்சிக்கான பசுமை திட்டங்களை முன்னெடுப்பதில் தாம் மகிழ்ச்சியடைவதாக சர்வதேச காலநிலை ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

சூரிய, காற்றாலை, நீர் மின் உற்பத்திக்கான வளங்களை இலங்கை கொண்டுள்ளமையால், பச்சை ஹைட்ரஜன் (green hydrogen) திட்டத்தை மேற்கொள்ள முடியும் என அவர் கூறியுள்ளார்.

இதேவேளை வடக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்கு தேவையான பூ ரண ஒத்துழைப்பை வழங்குவதாகவும், ஜனாதிபதியின் சர்வதேச காலநிலை ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம், ஆளுநரிடம் உறுதியளித்தார்.


தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

Math & Physics Tutoring
(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12
கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)
சி.இளஞ்செழியன்
Tel: 416-524-0424

# ஐக்கியம் இல்லையேல் எதுவுமிருக்காது! வடக்கு கிழக்கு சிவில் சமூகம் எடுத்துரைப்பு!



அரசியல் கட்சிகளின் ஒற்றுமையை வலியுறுத்தி, வடக்கு கிழக்கு சிவில் சமூகத்தின் ஏற்பாட்டில் தந்தை செல்வா நினைவு மண்டபத்தில் இடம் பெற்ற கூட்டத்தில் பிரதான அரசியல் கட்சிகளின் தலைவர்கள் அனைவரும் பங்கு கொண்டிருந்த னர். நீண்ட இடைவெளிக்கு பின்னர், மாறுபட்ட அரசியல் கட்சிகள் அனைத்தும் ஒரு சந்திப்பில் பங்கு கொண்ட சந்தர்ப்பமாக அமைந்திருந்தது.

பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளையின் தலைமையில் இடம் பெற்ற, மேற்படி கூட்டத்தில், அரசியல் ஆய்வாளர்கள் யதீந்திரா, நிலாந்தன், தினக்குரல் பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியர் தனபாலசிங்கம் ஆகியோர் உரையாற்றிருந்தனர்.

தமிழ் தேசிய அரசியல் கட்சிகள் செய்ய வேண்டியது என்ன என்னும் கேள்வி கேட்கக் கூடிய சூழல் இருக்கின்றதென்றால், கடந்த பதினான்கு வருடங்களில் எதையும் நம்மால் அடைய முடியவில்லை என்பது தான் அடிப்படையான விடயமாகும்.

இந்த பின்புலத்திலிருந்து தான் தமிழ் கட்சிகளை நோக்கி ஒற்றுமைப்படுங்கள் என்னும் கோரிக்கையை நாம் முன்வைக்க வேண்டியிருக்கின்றது. யுத்தம் முடிவுற்ற போது, தமிழ் மக்கள் மத்தியில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு மட்டுமே இருந்தது. ஆனால் இப்போது பல கட்சிகள் இருக்கின்றன. இந்த விடங்களை அரசியல் ஆய்வாளர் யதீந்திரா சுட்டிக் காட்டியிருந்தார்.

தமிழ் தேசிய அரசியல் கட்சிகள் ஓரணியாக வேண்டிய காலத்தின் கட்டாயம். ஐக்கியம் இல்லையேல் எதுவும் இருக்காது. இவ்வாறு அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் குறிப்பிட்டார்.

தமிழ்கட்சிகளின் ஐக்கியம் தேசத்தை கட்டியெழுப்புவதாக அமைய வேண்டும் மாறாக, வெறும் தேர்தல் இலக்கை அடிப்படையாகக் கொண்டதாக அமையக் கூடாது. தேர்தல் இந்த இலக்கின் ஒரு பகுதியாக அமைந்திருக்க வேண்டும்.

தமிழ் கட்சிகள் அனைத்துக்கும் கடந்தகால அனுபவங்கள் உண்டு, கட்சிகளுக்கு மட்டுமல்ல, புத்திஜீவிகள் ஏன் பொது மக்களுக்கும் அனுபவமுண்டு. ஆனால் கடந்த கால அனுபங்களிலிருந்து, எவருமே எதையும் கற்றுக் கொள்ளவில்லை. நிலைமைகள் பெரியளவில் மாறி விட்டன. முன்னர் அரசியலை நோக்கியது போன்று இப்போது பார்க்க முடியாது. இவ்வாறு தனபாலசிங்கம் குறிப்பிட்டார்.

வடக்கு கிழக்கு சிவில் சமூகம் அரசியல் கட்சிகளின் தலைவர்களுடன் தனியான கலந்துரை யாடல்களை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் ஈழநாட்டிற்கு தெரிவித்தனர்.

# கிறிஸ்தவ மதகுருமார்கள் கண்காணிக்கப்படுகின்றார்களாம் சுதந்திரமாகப் பேச முடியவில்லை என்கிறார் மல்கம்ரஞ்சித்

உயிர்த்த ஞாயிறுதாக்குதல் குறித்த சுயாதீன விசாரணைகளுக்கான சர்வதேச அழுத்தங்களை தீவிரப்படுத்துவதற்கு அவுஸ்திரேலியா உதவ வேண்டும் என கர்தினால் மல்கம் ரஞ்சித் வேண்டுகோள் விடுத்துள்ளார். ஏபிசிக்கு கர்தினால் இதனை தெரிவித்துள்ளார்.

270பேருக்கும் என்ன நடந்தது அதன் பின்னணியில் யார் உள்ளனர் என்பதை கண்டறிவதற்காக சுயாதீன விசாரணைகள் இடம்பெற வேண்டும் என்ற சர்வதேச அழுத்தங்களை கொடுப்பதற்கு அவுஸ்திரேலியாவும் உதவ வேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதனை பாரிய மனித உரிமை மீறலாக மனிதர்களின் கௌரவம் மீறப்பட்ட செயலாக அரசியல் சதி குறித்த சந்தேகம் உள்ள விடயமாக அவுஸ்திரேலிய அரசாங்கமும் ஏனைய அரசாங்கமும் கருதவேண்டும் என கர்தினால் தெரிவித்துள்ளார்.

முக்கிய நபர்கள் அமைச்சர்கள் உளவுத்துறையில் உள்ளவர்கள் யுத்தகாலத்திலும் அதன் பின்னரும் நிலவிய வன்முறை பாரிய குழப்பநிலை காணாமல் போதல்கள் படுகொலைகள் போன்றவற்றுடன் தொடர்புபட்டுள்ளனர் என தெரிவித்துள்ள கர்தினால் இதன் காரணமாகவே நாங்கள் சுயாதீனமான சுதந்திரமான அரசியல்வாதிகளால் வழி நடத்தப்படாத சர்வதேச தராதரங்களை பின்பற்றுகின்ற விசாரணைகளை கோருகின்றோம் எனவும் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குகுதல் குறித்து கேள்வி எழுப்பியமைக்காக சுரேஸ்சாலேயை அவமதித்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ் எனது மதகுரு ஒருவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என தெரிவித்துள்ள கர்தினல் மல்கம் ரஞ்சித் இந்த தாக்குதல் உயர்மட்டத்தில் உள்ள குழுவொன்றின் தாக்குதல் போல தென்படுகின்றது என குறிப்பிட்டிருந்தார் எனவும் தெரிவித்துள்ளார்.



இவர்கள் ஏனைய கிறிஸ்தவ மதகுருமார்களை கண்காணிக்கின்றனர் என்னை பற்றியும் ஏனைய கிறிஸ்தவ மதகுருமார்கள் குறித்தும் பல ஆவணங்களை கைவசம் வைத்திருக்கின்றனர் இது குறித்து நான் உறுதியாக சொல்கின்றேன் எங்கள் தொலைபேசிகள் பாதுகாப்பாக இல்லை நாங்கள் சுதந்திரமாக பேச முடியாத நிலையில் உள்ளோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விடயத்தில் நீதியை நிலைநாட்டுவதற்கான, உண்மையை கண்டறிவதற்கான முயற்சிகளை ஒரு போதும் கைவிடவேண்டாம் என பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ், கர்தினால் மல்கம் ரஞ்சித்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். சமீபத்தில் கர்தினால் மல்கம் ரஞ்சித்தும் கத்தோலிக்க திருச்சபையை சேர்ந்தவர்களும் பரிசுத்த பாப்பரசரை சந்தித்தவேளை அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார். உயிர்த்த ஞாயிறு தாக்குதலிற்கான நீதி உண்மையை பெற்றுக் கொள்வதற்கான முயற்சிகளை ஒருபோதும் கைவிட வேண்டாம் என பரிசுத்த பாப்பரசர் கேட்டுக் கொண்டார் கர்தினால் தெரிவித்துள்ளார்.

# ஐக்கியம் யாருக்காக?

தமிழ் தேசிய அரசியலை பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல் கட்சிகள் மத்தியில் ஒற்றுமை அவசியம். யுத்தம் முடிவுற்ற காலத்திலிருந்து இவ்வாறான அபிப்பிராயங்கள் பலராலும் முன்வைக்கப்பட்டு வருகின்றன. ஆனால் இந்த விடயத்தில் முன்னேற்றங்கள் ஏற்படவில்லை.

2009இல் யுத்தம் முடிவுற்ற போது தமிழ் மக்களின் முன்னால் தமிழ் தேசியக்கூட்டமைப்பு மட்டுமே இருந்தது. ஆனால் இன்றோ எண்ணுமளவிற்கு கட்சிகள் அதிகரித்து விட்டன. இந்த நிலையில் முன் னரை விடவும் இப்போது ஒற்றுமைப்பட வேண்டியதன் தேவை அதிகரித்திருக்கின்றது.

தமிழ் கட்சிகள் ஒற்றுமைப்பட வேண்டுமென்று கூறுகின்ற போது முதலில் எழும் கேள்விகள் ஏன் ஒற்றுமைப்பட வேண்டும்? யாருக்காக ஒற்றுமைப்பட வேண்டும்? 2009இற்கு பின்னர் ஒரு விடயத்தை முன்னெடுக்கும் போது மேல்வரும் பிரதான சவாலோ வித்தியாசமானது.

அதாவது, விடயத்தின் முக்கியத்துவத்தை அதன் தேவையை புரிந்து கொள்வதற்குப் பதிலாக யாரோ இதற்கு பின்னால் இருக்கின்றார்கள் என்ற வாறு புரிந்து கொள்வதும், தாங்கள் புரிந்து கொண்டதே சரியென்று மல்லுக் கட்டுக்கின்ற போக்கொன்று அதிகரித்திருக்கின்றது. அனைத்தையும் சதிக் கோட்பாடுகளின் வழியாக விளங்கிக் கொள்ள முற்படும் போக்கொன்று, பலரை ஆட்கொண்டிருக்கின்றது.

இந்தப் பின்புலத்தில் தான், தமிழ் கட்சிகள் மத்தியில் ஒற்றுமையின் தேவை தொடர்பில் பேசுகின்ற போது, இந்த ஒற்றுமைக் கோரிக்கை யாருக்கானது என்னும் கேள்வி எழலாம்.

தமிழ் கட்சிகள் சில விடயங்களில் தேர்தல் அரசியலுக்கு அப்பால் தமிழ் மக்களின் நலன்களில் ஓரணியாக நிற்க வேண்டும் என்பதைத் தான் ஒற்றுமை என்னும் சொல்வரையறுக்கின்றது.

அடுத்த கேள்வி – இது யாருக்கான ஒற்றுமை? பதில் சுலபமானது இது தமிழ் மக்களுக்கான ஒற்றுமை. தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகள் ஓரணியாக நிற்கின்ற போது, தமிழ் மக்களின் பேரம் பேசும் அரசியல் பலம் பெறும்.

இந்த அடிப்படையில் தான், பலமான இராணுவ கட்டமைப்புடன் இருந்த விடுதலைப் புலிகள் அமைப்பு, தமிழ் தேசியக் கூட்டமைப்பை பலப்படுத்தி அதன் தேர்தல் வெற்றிக்காக உழைத்தது.

ஏனெனில் அன்றைய சூழ்நிலையை கருத்தில் கொண்டே, விடுதலைப் புலிகளின் தலைமை சம்பந்தன் தலைமையிலான தமிழ் தேசியக் கூட்டமைப்பை தத்தெடுத்துக் கொண்டது அத்துடன், தங்களின் நிகழ்சி நிரலுக்கு ஏற்ப அதனை வழி நடத்தியது. ஒரு பலமான இராணுவ அமைப்பு எதற்காக தங்களால் தடை செய்யப்பட்ட இயக்கங்களையும் உள்ளடக்கியவாறு, ஒரு ஜனநாயக கட்சிகளின் கூட்டு தொடர்பில் சிந்தித்தது?

ஏனென்றால், பேச்சுவார்த்தைக்கு செல்லுகின்ற போது, தமிழ் தேசிய அரசியல் பல அணிகளால் பிரதிநிதித்துவம் செய்யப்படுமனால், அதனை சிங்கள ஆட்சியாளர்கள் தங்களின் பிரித்தாளும் தந்திரத்திற்கு இலகுவாக பயன்படுத்தி விடுவார்கள். இந்த அடிப்படையில் தான், தமிழ் தேசியக் கூட்டமைப்பை விடுதலைப் புலிகள் வழிநடத்தினர்.

இன்றும் அவ்வாறானதொரு நிலைமை தான் நமக்கு முன்னால் இருக்கின்றது. தமிழ் தேசிய அரசியல் தொடர்ந்தும் பலவீனமடைந்து செல்கின்றது. தமிழ் தேசிய அரசியல் பல அணிகளால் பிரதிநிதித்துவம் செய்யப்படுவது தான் இதற்கான பிரதான காரணமாகும்.

இந்த நிலைமையை மாற்றியமைப்பதற்கான ஒரு சொல்லாகவே ஒற்றுமை என்னும் சொல் பயன்படுத்தப்படுகின்றது. மற்றும்படி ஒற்றுமையென்பது, கட்சிகளை விட்டு விட்டு ஒன்றில் அனைவரும் கலப்பதை பற்றி பேசவில்லை.

மாறாக, அனைத்து கட்சிகளும், தமிழ் மக்களின் பேரம் பேசும் பலமாக மாறும் வகையில் ஒரு பொதுப் புள்ளியில் சந்திக்க வேண்டும். மக்களின் நலனுக்காக இதனை அனைத்து கட்சிகளும் கட்டாயம் செய்தாக வேண்டியிருக்கின்றது.

EELANADU 24 Nov 2023 ஈழநாடு

# வட்டுக்கோட்டை இளைஞன் பொலிசாரின் அடி, துன்புறுத்தல் காரணமாகவே உயிரிழந்தாரென சட்ட வைத்தியர் அறிக்கை! இளைஞரின் சடலத்துடன் ஊரவர்கள் நீதி கோரிப் போராட்டம்!

வட்டுக்கோட்டை வழக்கம்பரை பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இடம் பெற்ற களவு சம்பவம் குறித்து கைது செய்யப்பட்ட இளைஞன் உயிரிழந்துள்ளார். சித்தங்கேணி பகுதியைச் சேர்ந்த நாகராசா அலெக்ஸ் என்ற 23 வயது இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.




இச்சம்பவம் குறித்து இளைஞனின் உறவினர் ஒருவர் கூறுகையில் அலெக்ஸிடம் லான்ட் மாஸ்டர் வாகனம் ஒன்றுள்ளது. கடந்த 8ஆம் திகதி மரம் கடத்தல் சம்பந்தமான விசாரணை ஒன்று உள்ளதாக தெரிவித்த வட்டுக்கோட்டை பொலிஸார் அலெக்ஸை கைது செய்தனர். அவ்வேளை, அலெக்ஸ் பொலிஸ் நிலையம் செல்ல மறுக்க, அவருக்கு துணையாக அவரது நண்பனையும் பொலிஸார் அழைத்துச் சென்றனர்.

இந்நிலையில் நாங்கள் இரவு பொலிஸ் நிலையம் சென்ற வேளை அலெக்ஸின் கதறல் சத்தம் பொலிஸ் நிலையத்திலிருந்து கேட்டது. நாங்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவு செய்தோம். 8ஆம் திகதி கைது செய்யப்பட்ட அலெக்ஸ் 12ஆம் திகதி நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டார். இதன்போது அவர் மீது நகை திருட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்தது. அவரை நீதிமன்றத்தில் முற்படுத்திய வேளை, விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். இதன்போது அலெக்ஸின் உடல் நிலை சீரின்றி காணப்பட்டது. அவர் சிறைச்சாலையில் இருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு சிகிச்சை பெற்றுவந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்றார்.

## மருத்துவ அறிக்கை

வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர் கடுமையாக அடித்து துன்புறுத்தப் பட்டதால் நுரையீரல் பாதிப்புக்குள்ளாகி உயிரிழந்தார் என்று சட்ட மருத்துவ அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. உயிரிழந்தவரின் சடலம் உடற்கூறு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் இந்த அறிக்கையிடப்பட்டுள்ளது.

## நீதி கோரிப் போராட்டம்

வட்டுக்கோட்டை பொலிஸாரின் சித்திரவதைக்கு உள்ளாகி உயிரிழந்த சித்தங்கேணியை சேர்ந்த நாகராசா அலெக்ஸின் சடலத்துடன் ஊரவர்கள் நீதி கேட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். உயிரிழந்த இளைஞனின் இறுதி கிரியைகள் சித்தங்கேணியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று தகன கிரியைக்காக மயானத்திற்கு எடுத்து செல்லும் போது சடலத்துடன் ஊரவர்கள் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். பொலிசாரின் சித்திரவதையால் அலெக்ஸ் இறந்து 48 மணி நேரம் கடந்தும் இது வரையில் எவரும் கைது செய்யப்படவில்லை. பொலிஸ் விசாரணைக்குழு 48 மணி நேரத்திற்கு மேலாக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் என கூறப்படும் நிலையிலும் எவரும் கைது செய்யப்படாதது பொலிசாரின் விசாரணை மீது எமக்கு திருப்தி ஏற்படவில்லை என்பதுடன் அவர்கள் மீதான சந்தேகமும் வலுத்து வருகின்றன என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

## பேர்ள் அமைப்பு கண்டனம்

இலங்கையில் காணப்படும் தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்படும் கலாச்சாரம் முடிவிற்கு கொண்டு வரப்படும் வரை தமிழ் மக்களிற்கான சுயநிர்ணய உரிமையை உள்ளடக்கிய ஆக்கபூர்வமான அரசியல் தீர்வு சாத்தியமாகும் வரை நிலையான அமைதியோ உறுதித்தன்மையே காணப்படாது என்பதை வட்டுக்கோட்டை இளைஞர் அலெக்சின் மரணம் மீண்டும் உணர்த்தியுள்ளதாக சமத்துவம் மற்றும் நிவாரணத்திற்கான மக்கள் அமைப்பான பேர்ள் அமைப்பு தெரிவித்துள்ளது.

நாகராஜா அலெக்ஸ் உயிரிழப்பதற்கு முன்னர் தாம் காவல் துறையினரின் பிடியில் அனுபவித்த ஈவிரக்கமற்ற சித்திரவதைகள் குறித்து தெரிவித்த காணொளி சமூக வலைத்தளங்களில் வெளியாகியிருந்தது. இந்த நிலையில், சிறிலங்கா அரசாங்கத்தை பொறுப்புக்கூறலிற்கு உட்படுத்துவதற்கு சர்வதேச சமூகம் தவறியுள்ளதன் காரணமாக அலெக்சின் மரணம் நிகழ்ந்துள்ளதாக பேர்ள் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

தமிழர்களிற்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்கள் மற்றும் தொடர்ந்து இழைக்கப்படும் குற்றங்களிற்கு நீதியை வழங்கப் போவதில்லை மற்றும் பொறுப்புக்கூறலில் ஈடுபடப் போவதில்லை என்பதை வெளிப்படுத்துவதில் இலங்கை வலுவான அரசியல் உறுதிப்பாட்டை மீண்டும் மீண்டும் வெளிப்படுத்தி வருவதாக பேர்ள் அமைப்பு தெரிவித்துள்ளது.

## சுவிஸ் தூதுவர் கண்டனம்

வட்டுக்கோட்டை காவல் துறையினரால் தாக்கப்பட்டு உயிரிழந்த இளைஞனின் மரணம் குறித்து இலங்கைக்கான சுவிஸர்லாந்து தூதுவர் கவலை வெளியிட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் (22ம் பக்கம் பார்க்க)


# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து – நிலாந்தன்

# குஷ்பு முற்றவெளிக்கு வர மாட்டார்?

மற்றொரு இசை நிகழ்ச்சியும் சர்ச்சையாக மாறியிருக்கிறது. அடுத்த மாதம் 21 ஆம் தேதி யாழ்.முத்த வெளியில் தமிழகப் பாடகர் ஹரிஹரனின் இசை நிகழ்ச்சி நடக்கவிருக்கிறது. அந் நிகழ்ச்சியைப் பிரபல்யப் படுத்துவதற்காக களமிறக்கப்பட்ட இரண்டு தமிழகப் பிரபல்யங்கள் சர்ச்சையாக மாறியிருக்கிறார்கள்.

ஒருவர் நடன ஆசிரியர் கலா மாஸ்டர். மற்றவர் நடிகை குஷ்பு. கலா மாஸ்டர் கலைஞர் டிவியில் மானாட மயிலாட நிகழ்ச்சியை நடாத்தியவர். இறுதிக் கட்டப் போரில் ஈழத் தமிழர்கள் துன்பப் பட்டுக் கொண்டிருந்த போது அவர் தமிழக மக்களைத் திசை திருப்புவதற்காக அந்த நிகழ்ச்சியை நடாத்தினார் என்று அவர் மீது குற்றச்சாட்டு. குஷ்பு தன்னிடம் கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு பதில் கூறும் போது விடுதலைப் புலிகள் இயக்கத்தை பயங்கரவாதிகள் என்று வர்ணித்திருக்கிறார் என்ற குற்றச்சாட்டு.

அந்த நிகழ்ச்சியை ஒழுங்குபடுத்துவது கனடாவில் வசிக்கும் ஓர் ஈழத் தமிழர். இந்திய நடிகை ரம்பாவின் துணைவர். புலம்பெயர்ந்த நாடுகளில் வெற்றி பெற்ற முதலீட்டாளர்களில் ஒருவர். யாழ்ப்பாணம் கந்தர் மடம் சந்தியில் நோர்தேன் யுனி என்ற பெயரில் சிறிய பல்கலைக் கழகத்தை கட்டியிருக்கிறார். அவர் ஹரிஹரனை முத்த வெளியில் பாடவைக்க விரும்புகிறார். அந்த நிகழ்ச்சியின் கவர்ச்சியைக் கூட்டுவதற்காக இரண்டு பிரபல்யங்களை இணைத்திருக்கிறார். அது தான் இப்பொழுது பிரச்சனை.

அப்படித் தான் கடந்த மாதம் நடந்த சந்தோஷ் நாராயணனின் இசை நிகழ்ச்சியும் சர்ச்சையாக மாறியது. ஆனால் சந்தோஷ் நாராயணன் கூறுகிறார் நான் ஈழத்தமிழ்க் குடும்பத்தில் ஒருவன் என்று. அவருடைய மனைவி கோண்டாவிலைச் சேர்ந்தவர். சீ தமிழ் தொலைக்காட்சியில் சரிகமப நிகழ்ச்சியில் பேசும் போது அவர் புலம் பெயர்ந்த தமிழர்களே தன்னைப் போன்ற இசையமைப்பாளர்களுக்கு ௐசாப்பாடு போடும் கடவுள்கள் என்று வர்ணிக்கின்றார். இலங்கையில் இடம் பெற்றது இனப்படுகொலை என்றும் கூறுகிறார். அவரை யாழ்ப்பாணத்திற்கு அழைத்துக் கொண்டு வந்தவர் ஒரு புலம் பெயர்ந்த தமிழ் முதலீட்டாளர். கோடம்பாக்கத்தில் வெற்றிகரமாக முதலீடு செய்தவர். இயக்குனர் சங்கருக்கும் வடிவேலுவுக்கும் இடையிலான முரண்பாட்டைத் தீர்த்து வைக்குமளவுக்கு கோடம்பாக்கத்தில் செல்வாக்கு மிக்கவர். கொழும்பில் வங்குரோத்தாகிய எதிரிசிங்க வணிகக் குழுமத்தை விலைக்கு வாங்கியவர். ஐந்து சிங்களப் படங்களில் அவர் முதலீடு செய்கிறார். அண்மையில் அவர் தனது மனைவியோடு சென்று மகாநாயக்க தேரர்களைச் சந்தித்தார். இலங்கையில் தனது சொத்துக்களையும் முதலீட்டையும் பாதுகாப்பதற்கு அவருக்கு அது தேவையாக இருக்கலாம்.

சந்தோஷ் நாராயணன், ஹரிஹரன் போன்றவர்களின் இசை நிகழ்ச்சிகளுக்கு முதலீடு செய்வது புலம் பெயர்ந்த தமிழ் முதலீட்டாளர்கள். அவர்களும் போரின் விளைவுகள் தான். அவர்களும் ஈழத் தமிழ் ரத்தம் தான். அவர்கள் அந்நியர்கள் அல்ல. அவர்களோடு தமிழ் செயற்பாட்டாளர்களும் கட்சிகளும் உரையாட வேண்டும்.

முதலாளிகள் எப்பொழுதும் லாபத்தை நோக்கியே சிந்திப்பார்கள். அது அவர்களுடைய தொழில் ஒழுக்கம். ஆனால் அரசியல் செயற்பாட்டாளர்கள் அந்த முதலாளிகளை எப்படி ஆகக்கூடிய பட்சம் தேசியப் பண்பு மிக்கவர்களாக மாற்றுவது என்று சிந்தித்து உழைக்க வேண்டும். அது தான் தேசிய அரசியல் ஒழுக்கம்.அவர்களை எப்படித் தேச நிர்மாணத்தின் பங்காளிகளாக மாற்று



வது?

முதலில் ஈழத் தமிழர்கள் ஒன்றை விளங்

## கை பேசியால் காட்டிக் கொடுக்கப்பட்ட நாடு ஸ்ரீலங்கா

கிக் கொள்ள வேண்டும். தோல்விகளுக்கும் பின்னடைவுகளுக்கும் பிறத்தியாரை எப்பொழுதும் குறை சொல்லிக் கொண்டிருக்க முடியாது. ஈழத் தமிழர்களுக்காக ஈழத் தமிழர்கள் தான் போராட வேண்டும். தமிழகத்தவர்களோ அல்லது வெளிநாடுகளில் இருப்பவர்களோ எந்தளவுக்குப் போராடலாம் என்பதில் வரையறைகள் உண்டு. இந்த அடிப்படையில் சிந்தித்தால் ஈழத் தமிழர்கள் அல்லாதவர்களிடம் எதை எதிர்பார்க்கலாம்? எந்த அளவுக்கு எதிர்பார்க்கலாம்? என்பதில் பொருத்தமான

## கை பேசி செயலிகளால் சிதறடிக்கப்பட்ட இனம் தமிழ் இனம்

விளக்கங்கள் இருக்க வேண்டும். உதாரணமாக ஒரு சிங்கள முற்போக்கு வாதியிடம் அவர் தமிழ்த் தேசியவாதியாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கத் தேவையில்லை. அவர் இனவாதத்துக்கு எதிராக இருந்தாலே போதும். சிங்கள திரைப்படக் கலைஞர் பிரசன்ன விதானகே எடுக்கும் படம், தமிழ் மக்களின் போராட்டத்தை ஆதரிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கத் தேவையில்லை. அது இனவாதத்தை எதிர்த்தாலே போதும். அதுவே தமிழ் அரசியலுக்கு வெற்றிதான்.

தமிழரல்லாத வேற்று இனத்தவர் ஒருவர் கட்டாயம் தமிழ்த் தேசியவாதியாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்க முடியாது.அவர் தமிழ் மக்களின் நியாயத்தை ஏற்றுக் கொண்டாலே போதும்.

அப்படித்தான் தமிழகமும் தமிழகத்தில் இருப்பவர்கள் 100வீதம் ஈழத் தமிழ் அபிமானிகளாக இருக்க வேண்டும் என்றில்லை. அங்கே 19 பேர் தீக்குளித்து இறந்திருக்கிறார்கள் என்பது மகத்தானது. அதற்காக எல்லாரையும் தீக்குளிக்கக் கேட்கலாமா?

அவர்கள் ஈழத் தமிழர்களுக்காக மாநில அரசாங்கத்தின் மீதும் மத்திய அரசாங்கத்தின் மீதும் அழுத்தங்களைக் கொடுத்தாலே அது மகத்தான விளைவுகளைத் தரும்.

2009க்குப் பின் தமிழகத்தில் உள்ள இரண்டு பெரிய கட்சிகளும் ஈழத்தமிழ் அரசியலில் இருந்து விலகிச்செல்லும் போக்கு அதிகரித்து வரும் ஒரு பின்னணியில் ஈழத் தமிழ் நோக்கு நிலையிலிருந்து தமிழகத்தை எப்படிக் கையாள்வது என்ற அடிப்படையிலும் தமிழகப் பிரபல்யங்கள் சம்பந்தப்பட்ட விவகாரங்களை அணுக வேண்டும்.

ஏன் அதிகம் போவான்? தாயகத்தில் சொந்தத் தமிழ் மக்களில் ஒரு தொகுதியினர் தமிழ்த் தேசிய அரசியற் பரப்புக்கு வெளியே நிற்கிறார்கள். டக்ளஸ் தேவானந்தாவுக்கும் அங்கஜனிற்கும் பிள்ளையானுக்கும் வாக்களித்தவர்களை எதிரிகளாகப் பார்க்கலாமா? அவர்கள் எங்களுடைய மக்கள் இல்லையா? அவர்களை எப்படித் தமிழ்த் தேசிய நீரோட்டத்துக்குள் ஈர்த்தெடுப்பது என்று தானே சிந்திக்க வேண்டும்? தாயகத்திலேயே தமிழ்ச் சனத் தொகையில் ஒரு தொகுதி தமிழ்த் தேசிய அரசியலுக்கு வெளியே நிற்கின்றது. அப்படியென்றால் தாயகத்துக்கு வெளியே நிலைமை எப்படியிருக்கும்? அவ்வாறு தமிழ்த் தேசிய அரசியலுக்கு வெளியே நிற்பவர்களை தமிழ்த் தேசிய நீரோட்டத்துக்குள் ஈர்த்தெடுப்பது தான் தேசத்தை திரட்டும் அரசியல்.

புலம் பெயர்ந்த தமிழர்களிடம் கூட எது வரை எதிர்பார்க்கலாம் என்பதில் வரையறைகள் உண்டு. ஏனெனில் அவர்கள் கள யதார்த்தத்திற்கு வெளியே வசிக்கின்றார்கள். அவர்களை எப்படி ஆகக் கூடிய பட்ஷம் தேச நிர்மாணத்தின் பங்காளிகளாக மாற்றுவது என்று தான் சிந்திக்கலாம்.

புலம்பெயர்ந்த தமிழர்கள் ஒரு விதத்தில் தாயகத்தின் நீட்சியும் அகட்சியுந்தான். ஆனால் அவர்கள்தான் தமிழக சினிமா பிரபல்யங்களை அழைத்து கோடிக் கணக்கான காசைச் செலவழித்து நிகழ்ச்சிகளை அரங்கேற்றி வருகிறார்கள்.

அண்மையில் கனடாவில் நடந்த சிற் சிறீராமின் இசை நிகழ்ச்சிக்குரிய பட்ஜெட் 10 லட்சம் கனேடிய டொலர்கள் என்று கூறப்படுகிறது.

குஷ்பு ஒரு நடிகை மட்டுமல்ல. அரசியல்வாதியும் கூட. 2010ல் அவர் திமுகவில் சேர்ந்தார். 2014 இல் அவர் கொங்கிரஸில் சேர்ந்தார். 2020இல் அவர் பாரதிய ஜனதாவில் சேர்ந்தார். அதாவது இப்பொழுது அவர் ஆளுங்கட்சியில் இருக்கிறார்.

2014இல் அவர் கனடாவுக்குப் போனார். மார்க்கம் பெயர் மைதானத்தில் நடந்த அவருடைய நிகழ்வில் ஆயிரக்கணக் கானவர்கள் பங்கு பற்றினார்கள். அதில் அவருடைய ரசிகர்கள் அவருடைய காலில் விழுந்ததைத் தான் கண்டதாக ஒரு சமூக செயற்பாட்டாளர் சொன்னார். பிந்திக் கிடைத்த தகவலின்படி ஹரிஹரனின் இசை நிகழ்ச்சியிலிருந்து அவர் நீக்கப்பட்டிருப்பதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

ஒருபுறம் புலம்பெயர் தமிழர்கள் தமிழகச் சினிமாப் பிரபல்யங்களை அழைத்து கோடிக்கணக்கில் காசைக் கொட்டிக் கொண்டாடுகிறார்கள். இன்னொரு புறம் நீதிக்கான போராட்டத்தின் ஈட்டி முனையாகவும் காணப்படுகிறார்கள். இந்த இரண்டும் கலந்தது தான் புலம்பெயர்ந்த வாழ்வின் யதார்த்தம்.

எனவே புலம்பெயர்ந்த தமிழ் முதலீட்டாளர்கள் தாயகத்தில் முதலீடு செய்யும் பொழுது அதனை கொழும்பு மைய நோக்கு நிலையில் இருந்து செய்வதற்கு பதிலாக தேச நிர்மாணம் என்ற நோக்கு நிலையில் இருந்து செய்யுமாறு ஊக்குவிக்க வேண்டும். தாயகத்தில் உள்ள கட்சிகளும் செயற்பாட்டாளர்களும் கருத்துருவாக்கிகளும் புலம்பெயர்ந்த தமிழ்ச் செயற்பாட்டாளர்களும் அதை நோக்கி முதலீட்டாளர்களை ஊக்குவிக்க வேண்டும்.

2009க்கு பின் கைபேசியால் காட்டிக் கொடுக்கப்பட்ட நாடு ஸ்ரீலங்கா. மே18 க்கு பின் யுத்தகளத்தில் எடுக்கப்பட்ட எல்லா படங்களும் இலங்கை அரச படைகள் தமது கமராக்களினாலும் தமது கைபேசிகளாலும் எடுத்த படங்கள் தான். அந்தப் படங்கள் தான் பிந்நாளில் இலங்கைக்கு எதிரான போர்க் குற்றச் சான்றுகளாக மாறின.



அதாவது கைபேசியால் காட்டிக் கொடுக்கப்பட்ட ஒரு நாடு. அது போலவே ஈழத் தமிழர்களும் 2009க்கு பின் சமூக வலைத்தளங்களால், கைபேசிச் செயலிகளால் சிதறடிக்கப்பட்ட ஒரு தேசிய இனமாக மாறி வருகிறார்கள்.

ஈழத் தமிழர்கள் ஒருவர் மற்றவருக்கு எதிராக அள்ளி வீசும் அவதூறுகளால் தேசம் சிதறிக் கொண்டே போகிறது. சமூக வலைத்தளங்களால் சிதறடிக்கப்பட்ட ஒரு தேசம்?

இனப்படுகொலையால் புலப் பெயர்ச்சியால் மெலிந்து சிதறிய ஒரு சிறிய தேசம், சமூக வலைத்தளங்களில் மேலும் மேலும் சிதறி கொண்டு போகிறது. யாதும் ஊராகப் புலம் பெயர்ந்து விட்டோம். ஆனால் யாவரும் கேளீரா? அதாவது யாவரும் நண்பர்களா? தீதும் நன்றும் பிறர் தருவதில்லை. நாமே நமக்குத் தேடிக் கொள்பவையா?

# 12வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! நவம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

12 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 12 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

17 நவம்பர் 2023 முதல் 24 நவம்பர் 2023 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு கடந்த செப்டம்பர் முதல் 12வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600**


## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி இரத்தினேஸ்வரி பரராஜசிங்கம்

சரவணை கிழக்கு வேலணையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி இரத்தினேஸ்வரி பரராஜசிங்கம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாள் 27 நவம்பர் 2023 திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லம் பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி இரத்தினேஸ்வரி பரராஜசிங்கம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 6வது ஆண்டு நினைவஞ்சலி



### பண்டிதர் திரு அலெக்ஸ்சாந்தர் மாஸ்டர்

யாழ்ப்பாணம் நல்லூரைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த அமரர் பண்டிதர் திரு அலெக்ஸ் சாந்தர் மாஸ்டர்) அவர்களது ஆறாவது ஆண்டு நினைவு நாள் 15 ஒக்டோபர் 2022 சனிக்கிழமையாகும். அன்றைய நாளுக்காக அவரது நினைவாக அன்னாரது குடும்பத்தினர் குடும்பத்தினர் 19நவம்பர் 2023 அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு பண்டிதர் அலெக்ஸ்சாந்தர் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் ஆகியோருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 31ம்நாள் நினைவஞ்சலி



### திருமதி கிருஷ்ணகுமாரி நடராஜா

மலேசியா கோலாலம்பூரைப் பிறப்பிடமாகவும் யாழ்.கந்தர்மடத்தை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி கிருஷ்ணகுமாரி நடராஜா அவர்களது 31ம் நாள் நினைவுநாள் 20 நவம்பர் 2023 திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி கிருஷ்ணகுமாரி நடராஜா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 2வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி ஸ்ரீஸ்கந்தராஜா இந்திராதேவி

மாதகலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி ஸ்ரீஸ்கந்தராஜா இந்திராதேவி அவர்களது இரண்டாவது ஆண்டு நினைவு நாள் 28 நவம்பர் 2023 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி ஸ்ரீஸ்கந்தராஜா இந்திராதேவி அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி நாகராணி மார்க்கண்டு

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் லண்டனை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி நாகராணி மார்க்கண்டு அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாள் 22 நவம்பர் 2023 புதன்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லம் பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி நாகராணி மார்க்கண்டு அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி, அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 9வது ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் உயர்திரு V.K நாகராஜா

புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு V.K. நாகராஜா அவர்களது ஒன்பதாவது ஆண்டு நினைவு நாள் 24 நவம்பர் 2023 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு V.K.நாகராஜா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் ஆகியோருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 42,32வது ஆண்டு நினைவஞ்சலிகள்



திரு இராமலிங்கம் நடுவில்
திருமதி
நடுவில் புவனேஸ்வரி

யாழ்ப்பாணம் நல்லூரடியைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த திரு இராமலிங்கம் நடுவில் அவர்களது 42வது ஆண்டு நினைவஞ்சலியும் திருமதி நடுவில் புவனேஸ்வரி அவர்களது 32வது ஆண்டு நினைவஞ்சலியும் 29 நவம்பர் 2023 புதன்கிழமையாகும். அன்றையதினம் அன்னார்களது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு இராமலிங்கம் நடுவில், திருமதி நடுவில் புவனேஸ்வரி ஆகியோரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




15 ஒக்டோபர் 2023 யாழ்.நல்லூரைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த பண்டிதர் திரு அலெக்ஸ்சாந்தர் மாஸ்டர் அவர்களது ஆறாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் 19 நவம்பர் 2023 ஞாயிற்றுக்கிழமை அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




20 நவம்பர் 2023 திங்கட்கிழமை மலேசியா கோலாலம்பூரைப் பிறப்பிடமாகவும் யாழ்.கந்தர்மடத்தை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி கிருஷ்ணகுமாரி நடராஜா அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




20 நவம்பர் 2023 திங்கட்கிழமை பேராலை பளையைச் சேர்ந்தவர்களான திரு வீரகத்தி கதிர்காமு அவர்களது 12வது ஆண்டு நினைவாகவும் திருமதி கதிர்காமு தங்கம்மா அவர்களது 2வது ஆண்டு நினைவாகவும் அன்னார்களது குடும்பத்தினர் அவர்களது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




20 நவம்பர் 2023 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி சரஸ்வதி மகாலிங்கம் அவர்களது 84வது பிறந்த நன்நாளுக்காகவும் கனடாவில் வசிக்கும் திரு திருமதி மனோகரன் காந்தரூபி தம்பதிகளின் செல்வப்புதல்வி ஆரபியின் 17வது பிறந்த நன்நாளுக்காகவும் இருவரும் இணைந்து அன்றைய தினம் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்




21 நவம்பர் 2023 செவ்வாய்க்கிழமைஉரும்பிராயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி முருகேசு பரிமளம் அவர்களது 12வது ஆண்டு நினைவாக அன்னாரது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்





21 நவம்பர் 2023 செவ்வாய்க்கிழமைஉரும்பிராயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி முருகேசு பரிமளம் அவர்களது 12வது ஆண்டு நினைவாக அன்னாரது குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




21 நவம்பர் 2023 செவ்வாய்க்கிழமை கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி துரைராஜா இராசமணி அவர்களது மூன்றாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்





22 நவம்பர் 2023 புதன்கிழமை யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் லண்டனை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி நாகராணி மார்க்கண்டு அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




22 நவம்பர் 2023 புதன்கிழமை யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் லண்டனை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி நாகராணி மார்க்கண்டு அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




22 நவம்பர் 2023 கனடாவில் வசிக்கும் திருமதி நவரெத்தினம் பரமேஸ்வரி அவர்களது 80வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி நவரெத்தினம் பரமேஸ்வரி அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




24 நவம்பர் 2023 வெள்ளிக்கிழமை புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு V.K. நாகராஜா அவர்களது ஒன்பதாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்

## 80வது பிறந்த நன்நாள் வாழ்த்து




## திருமதி நவரெத்தினம் பரமேஸ்வரி

கனடாவில் வசிக்கும் திருமதி நவரெத்தினம் பரமேஸ்வரி அவர்களது 80வது பிறந்த நன்நாள் 22 நவம்பர் 2023 புதன்கிழமையாகும். அன்றைய தினம் திருமதி நவரெத்தினம் பரமேஸ்வரி அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார். அகவை எண்பது காணும் திருமதி நவரெத்தினம் பரமேஸ்வரி அவர்கள் நோய் நொடியின்றி பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்தும் அவரது குடும்பத்தினர் உறவுகளுடன் இணைந்து ஈழநாடு வாசகர்களும் பாரதி இல்லக் குழந்தைகளும் வாழ்த்துகின்றார்கள். வாழ்க வளமுடன்!




24 நவம்பர் 2023 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சிரோன் சிவானி தம்பதிகளின் செல்வப்புதல்வி அனேலா சிரோனின் பிறந்த 3ம் நன்நாள் ஆகும். அன்றையதினம் செல்வி அனேலாவும் அவரது பெற்றோர்கள், உறவுகள் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




11 நவம்பர் 2023 சனிக்கிழமைவேலணையைப் பிறப்பிடமாகவும் யாழ்.பிறவுன் றோட்டை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சதாசிவம் சண்முகம் அவர்களது 43வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.

# ஈழமுரசு

ஈழமுரசும் கனடா வாழ் தமிழ் மக்களும்
பெருமையுடன் கொண்டாடும் தமிழீழத் தேசியத்
தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களின்

# 69



தலைவன்
பிறந்தநாள்
அதுவே
தமிழன்
நிமிர்ந்த நாள்!

வீழ்ந்து விடாத
வீரம்
மண்டியிடாத
மானம்

# அகவை விழா

## மாபெரும் எழுச்சி விழா

## இருப்பாய் தமிழா நெருப்பாய்!

AAROSAI

2023 நவம்பர் 26 ஞாயிறு
மாலை 5 மணி

இடம்:

**TORONTO**
METROPOLITAN CENTRE
3840, Finch Ave East;
Scarborough ON., M1T 3T4
(Kennedy & Finch)

**MONTREAL**
Le Château Royal
3500 Bd du Souvenir,
Lavel, Montreal
QC H7V 1X2

ஈழமுரசின் விசேட இணைப்பில் தேசியத்தலைவருக்கு வாழ்த்து தெரிவிக்க விரும்பின் தொடர்புகொள்ளவும்


தமிழ் மிரர் Tamil Mirror

Toronto (647) 657-8566, (647) 783-3466, (587) 982-8829, (437) 224 7923
Montreal 438-483-1157

Yugam Media Inc



‘தமிழர் தேசிய நினைவெழுச்சி நாள்’
மார்க்கம் ஃபெயார்கிறவுண்ட்ஸ்’இல்
மாவீரர் துயிலும் இல்லம்
மாவீரர் நாள்
நவம்பர் 27-2023 - திங்கட்கிழமை
எங்களுக்காகத் தமிழீழ மண்ணுக்காகத் தமிழீழத் தேசியத்துக்காகத்
தமது உயிரை ஈந்த மாவீரர்களை வணங்கும் மாபெரும் வணக்க நிகழ்வு
Tamil National Heroes Day
To Remember Our Heroes’
who Sacrificed their Life for us,
for Our Treasured Land and Tamil Nationalism
கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்
றொறன்ரோ
கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்
MARKHAM FAIR
Markham Fairgrounds
10801 McCowan Road
Markham, ON L3P 3J3
( McCowan Road & Elgin Mills Road East )
வழமைபோன்று ஒரே இடத்தில் மூன்று நிகழ்வுகள்
1ஆம் நிகழ்வு: காலை 7:00 மணி
2ஆம் நிகழ்வு: மதியம் 1:00 மணி
3ஆம் நிகழ்வு: மாலை 6:00 மணி
மொன்றியல்
27-11-2023
திங்கட்கிழமை
மாலை 5:00 மணி
Le Château Royal
3500 Bd du Souvenir,
Laval, QC H7V 1X2
ஒட்டாவா
27-11-2023
திங்கட்கிழமை
மாலை 5:30 மணி
Nepean Sportsplex - Hall A
1701 Woodroffe Ave,
Nepean, ON K2G 1W2
Tell: 647-619-3619 mail: ctro@tamilremembrance.com / www.tamilremembrance.com / www.facebook.cm/tamilremembrance



# அருள்மிகு கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்

# CANADA SRI AYYAPPAN HINDU TEMPLE

635 MIDDLEFIELD ROAD, SCARBOROUGH, ON, M1V 5B8 TEL: 416-321-6104 | www.ayyappan.ca

## மண்டல மகர விரத விஞ்ஞாபனமும் ஐயப்பன் மாலை அணியும் வைபவமும்

### 17-11-2023 வெள்ளிக்கிழமை முதல் 21-01-2024 ஞாயிற்றுக்கிழமை வரை

ஐயப்பன் மெய்யடியார்களே!

கலியுகத்தில் தர்மம் குன்றி அதர்மம் மேலிட்டு துன்ப சாகரத்தில் உழலும் வேளையில் தன்னை நாடி வந்த பக்தர்களை கைவிடாத தெய்வம், பட்ட பந்தம் அணிந்து சின்முத்திரைகாட்டி நிராயுதபாணியாய் காட்சி தந்து நெஞ்சுருகி, நெஞ்சுருக வைத்து எம்மை அயராது ரட்சிக்கும் பகவான் ஐயப்பன். ஸ்காபரோ - 635 மிடில்பீல் றோட்டில் அமைந்துள்ள கனடா ஸ்ரீஐயப்பன் இந்து ஆலயத்தில் மண்டல மகர விரத மாலை அணியும் வைபவம் 17.11.2023 வெள்ளிக்கிழமை அதிகாலை 5.00 மணிக்கு கணபதி ஹோமம், தொடர்ந்து சாஸ்தா ஹோமம். அதிகாலை 6.00 மணிமுதல் இரவு 8.00 மணிவரை புனித துளசிமாலை அணியும் வைபவம் இடம் பெறும். மாலை அணிந்து விரதமிருக்க விரும்பும் அடியார்கள் தங்கள் பெயர்களை முன்கூட்டியே ஆலய காரியாலயத்தில் கட்டாயம் பதிவு செய்து கொள்ளவும்.

### தினமும் இரவு 9.15மணிக்கு ஹரிவராஸன பூசை இடம் பெறும்.

**வனதேவதை, பூஜை** - 16-11-2023 வியாழக்கிழமை மாலை 6.00 மணி

**விசேட ஹோமம் - மாலை அணிதல்** - 17-11-2023 வெள்ளிக்கிழமை - அதிகாலை 4.00 மணிக்கு கணபதி ஹோமம், தொடர்ந்து சாஸ்தா ஹோமம். துளசி மாலை அணியும் வைபவம் அதிகாலை 5.00 மணிமுதல் இரவு 8.00 மணிவரை இடம் பெறும்

**சுவாமிமார்களின் விளக்குப்பூசை**
24-11-2023 வெள்ளிக்கிழமை, 25.11.2023 சனிக்கிழமை ஆகிய இருதினங்களும் மாலை 5.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை இடம் பெறும்.

**ஆஞ்சநேய யாகம்** - 26-11-2023 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 முதல் 11.00 மணி வரை நடைபெறும்.

**சுவாமிமார்களின் இலட்சார்ச்சனை**
01.12.2023 வெள்ளிக்கிழமை, 02.12.2023 சனிக்கிழமை ஆகிய இரு தினங்களும் காலை 10.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரையும், மாலை 6.00 மணி முதல் மாலை 7.00 மணி வரையும் இடம் பெறும்.

**1008 கலச சங்காபிசேகம்** - 10-12-2023 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு இடம் பெறும்.

**பால்குட அபிஷேகம்** 17-12-2023 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி முதல் 11.00 மணிவரையும், மாலை 6.00 மணி முதல் மாலை 7.00 மணிவரையும் இடம் பெறும்.

**புலிப்பால் வேட்டை** - 17-13-2023 ஞாயிற்றுக்கிழமை மதியம் இடம் பெறும்.

**நாகராஜ உற்சவம் - சர்ப்ப சாந்தி** - 17-12-2023 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரையும் இடம் பெறும்.

**நெய் நிரப்புதல், இருமுடி கட்டுதல், பேட்டை துள்ளுதல் படி ஏறி அபிஷேகம் செய்தல்**
25-12-2023 திங்கட்கிழமை, 26.12.2023 செவ்வாய்க்கிழமை ஆகிய தினங்களில் அதிகாலை 6:00 மணி முதல் மாலை 5:00 மணி வரையும் இடம் பெறும். தொடர்ந்து 27.12.2023 புதன்கிழமை தொடக்கம் 31.12.20223 ஞாயிற்றுக்கிழமை வரை காலை 8:00 மணி முதல் காலை 11:00 மணி வரையும் நெய் அபிஷேகம் நடை பெறும்.

**பேட்டை துள்ளுதல்**
26-12-2023 செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணிக்கு இடம்பெறும்.

**மஞ்சமாதா திருவிழா, புஸ்பாபிசேகம்**
01-01-2024 திங்கட்கிழமை முதல் 15-01-2024 திங்கட்கிழமை வரை இடம்பெறும்.

**மகர சங்கிராந்தி, திருவாபரணம், மகரஜோதி தரிசனம், பூச்சொரிதல், தைப்பொங்கல்**
15-01-2024 திங்கட்கிழமை

**வைரவர் மடை, வனபூஜை, குருதிபூஜை, வேண்டுதல் நிறைவேற்று உற்சவம்**
21-01-2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணிக்கு இடம் பெறும்.



**அடியார்கள் புனிதமான ஐயப்பன் மகரமண்டல பூசைக்காலத்தில் பக்தி சிரத்தையுடன் காலை, மாலை நடைபெறும் ஐயப்பூசை விழாக்களில் கலந்து கொள்வதுடன் முடிந்தவரை மண்டலபூசை உபயங்களை பொறுப்பேற்று சிறப்பித்து ஐயப்ப பெருமானின் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

### பக்தர்களுக்கு முக்கிய அறிவித்தல்கள்

1. மாலை அணிதல் 17.11.2023 வெள்ளிக்கிழமை அதிகாலை 5:00 மணிக்கு ஆரம்பமாகும்.
2. ஆலயத்தினுள் கைத்தொலைபேசியை பாவிக்க வேண்டாம்.
3. ஆலயத்தினுள் புகைப்படம், வீடியோ எடுப்பதாயின் காரியாலயத்தில் அனுமதி பெற்றுக் கொள்ளவும்.

- இறை சேவையிலுள்ள ஆலய அறங்காவலர் சபை

# யாழ்ப்பாணத்திற்கு வந்த சீனத் தூதுவர்

**கட்டுரையாளர்: யாழ்ப்பாணத்தில் இருந்து – நிலாந்தன் –**



சர்ச்சைக்குரிய சீனாவின் ஆய்வுக் கப்பல் இலங்கைத் துறைமுகத்தில் தரித்து நின்று வெளியேறிய சில நாட்களில், இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் இலங்கைக்கு வந்தார். அவர் வடக்கு கிழக்குக்கும் வந்து போனார். அவர் வந்து போன சில நாட்களின் பின் கடந்த வாரம், இலங்கைக்கான சீனத் தூதுவர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தார். கடந்த சில ஆண்டுகளில் இது இரண்டாவது வருகை.

இங்கே அவர் பல்வேறு இடங்களுக்கும் சென்றார். சீனாவில் உள்ள ஒரு பௌத்த அறக்கட்டளையின் பெயரால் நலிவுற்றோருக்கு உதவிப் பொதிகளை வழங்கினார். யாழ் ஜெட்விங் சுற்றுலா விடுதியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிவில் சமூகப் பிரதிநிதிகள் மற்றும் முதலீட்டாளர்கள் உள்ளிட்ட 10 பேர்களைச் சந்தித்தார்.



பொதுவாக ஏனைய வெளிநாட்டுத் தூதுவர்கள் யாழ்ப்பாணத்துக்கு வரும் பொழுது உதவியாளர்களோடு வருவார்கள். சோடியாக வருவதில்லை. ஆனால் சீனத் தூதுவர் அவருடைய மனைவியோடு வந்தார். ஜெட்விங்கில் நடந்த சந்திப்பில் அவருடைய மனைவியும் பங்குபற்றினார். உரையாடல்களில் அவரும் தன் கணவருக்கு உதவினார். அது வித்தியாசமாக இருந்தது.

ஒரு சிவில் சமூக பிரதிநிதி வடக்கில் உள்ள கடலட்டைப் பண்ணைகளைப் பற்றிக் கேட்டார். அதற்குப் பதில் அளிக்கையில், வடக்கில் கடலட்டை பண்ணைகளை தாங்கள் கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளுக்கு முன் கைவிட்டு விட்டதாகச் சீனத் தூதுவர் சொன்னார். சீனாவின் முதலீடுகள் உள்நோக்க முடியவை அல்ல என்றும் ஊடகங்களில் கூறப்படுவது போல சீனாவிடம் மறைவான நிகழ்ச்சி நிரல் எதுவும் கிடையாது என்றும் கூறினார்.

மேற்கு நாடுகளின் இரட்டை நிலைப்பாடுகளை விமர்சித்தார். சீனா தொடர்பான மேற்கு நாடுகளின் குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்கும் விதத்தில் அந்த விமர்சனம் அமைந்திருந்தது. அதே சமயம் இந்தியா சீனாவின் நெருக்கமான பொருளாதாரப் பங்காளி என்ற பொருள்பட சொன்னார். எனினும் யாழ்ப்பாணக் குடாநாட்டின் தீவுப் பகுதிகளில் சீனா மீளப் புதுப்பிக்கும் எரிசக்தி திட்டங்களுக்காக முதலீடு செய்ய முற்பட்ட பொழுது அதனை ஒரு வெளிநாடு தடுத்தது என்று சொன்னார்.

அது போலவே சீனாவில் உள்ள கன்பூசியஸ் பல்கலைக்கழகமும் யாழ் பல்கலைக்கழகமும் இணைந்து முன்னெடுக்கவிருந்த சில நடவடிக்கைகளையும் ஒரு வெளிநாடு தடுத்து விட்டது என்று சொன்னார். அவர் வெளிநாடு என்று சொன்னது இந்தியாவைத் தான். மற்றபடி இந்தியாவை அவர் அதிகம் விமர்சிக்கவில்லை.

இலங்கைத் தீவில் உள்ள மூன்று இனங்களையும் சீனா ஒரே விதமாகவே அணுகுகின்றது என்றும் சொன்னார். இதில் சீனா பாரபட்சம் காட்டவில்லை என்றும் சொன்னார். பெருந்தொற்று நோய்க்கு காலத்தில் சீனா இலங்கைக்கு சினோபாம் தடுப்பூசிகளை கொடையாக வழங்கியது. அதன் போது தான் கோத்தாபயவிடம் அந்தத் தடுப்பூசிகள் தமிழ் பகுதிகளுக்கு விநியோகிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்திக் கூறியதாகவும் சொன்னார்.

சிவில் சமூகப் பிரதிநிதிகள் அவரிடம் கேள்வி கேட்டார்கள். குறிப்பாக கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானங்களைக் கொண்டு வரும் பொழுது சீனா அரசாங்கத்தை ஆதரிப்பதை அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். அரசாங்கத்தை ஆதரிப்பது என்பது அதன் தர்க்கபூர்வ விளைவாக, அரசாங்கத்தின் ஒடுக்குமுறைகளையும் ஆதரிப்பதாகவே எடுத்துக் கொள்ளப்படும் என்றும் சுட்டிக் காட்டினார்கள். மேலும் அண்மை ஆண்டுகளில் ஐநா மனித உரிமைகள் பேரவையில், இந்தியாவின் நிலைப்பாட்டில் மாற்றங்கள் தெரியும் ஒரு பின்னணியில், சீனா தொடர்ந்தும் இலங்கை அரசாங்கத்தை ஆதரித்து வருகிறது என்றும் அங்கு கூறப்பட்டது.

அதோடு இலங்கை இனப்பிரச்சினை தொடர்பில் இந்தியா ஏற்கனவே ஒரு தீர்வை முன் வைத்திருக்கிறது. மேற்கு நாடுகள் ஐநாவில் தீர்மானங்களை நிறைவேற்றுகின்றன. ஆனால் சீனா இனப்பிரச்சினைக்கு என்ன தீர்வு என்பதனை இது வரை தெளிவாகச் சொல்லவில்லை என்றும் சிவில் சமூக பிரதிநிதிகள் சுட்டிக் காட்டினார்கள்.

குறிப்பாக அண்மையில் பலஸ்தீனத்துக்கும் இஸ்ரேலுக்கும் இடையே மோதல்கள் வெடித்த போது சீனா இரு நாடு என்ற நிலைப்பாட்டை ஆதரித்ததைச் சுட்டிக்காட்டிய அவர்கள்,அதேபோன்று இலங்கைத் தீவிலும் இனப்பிரச்சினை தொடர்பாக சீனா தெளிவான ஒரு நிலைப்பாட்டைக் கூற வேண்டும் என்றும் கேட்டார்கள்.

முக்கியமாக இனப்பிரச்சினைக்கு சீனாவின் தீர்வு என்ன என்ற கேள்விக்கு வழமையாக கூறப்படும் டெம்ப்லேட் வகைப் பதிலாகிய, ஒரு நாட்டின் உள்விவகாரங்களில் தலையிடுவதில்லை என்ற பதிலை தமிழ் மக்கள் எதிர்பார்க்கவில்லை என்றும், அத்தகைய பதில்களால் தமிழ் மக்கள் ஏற்கனவே சலிப்படைத்திருக்கிறார்கள் என்றும் கூறப்பட்டது.

தன்னிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு சீனத் தூதுவர் ஒவ்வொன்றாகப் பதில் சொன்னார். சிவில் சமூகப் பிரதிநிதிகளை நண்பர்களே என்று அவர் விழித்தார். ஆழமான விஷயங்களுக்கு ஆழமான பதில்களைச் சொல்ல வேண்டி வந்த பொழுது அவர் சீன மொழியில் பேசினார். அது ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப் பட்டது.

இலங்கையின் இனப்பிரச்சினையில் சீனா நேரடியாகத் தலையிடாது என்று அவர் சொன்னார். ஏனென்றால் சீனா எந்த ஒரு நாட்டினுடைய உள்விவகாரத்திலும் தலையிடாது என்றும் சொன்னார். மேலும் பலஸ்தீன விவகாரத்தில் சீனா ஐநாவின் நிலைப்பாட்டையே ஆதரிப்பதாகவும் சொன்னார். அங்கு இருநாடு என்ற நிலைப்பாடு ஐநா தீர்மானத்தின் வழி வந்தது என்றும், உலக சமூகம் ஒன்றாக எடுத்த முடிவு அது என்றும், எனவே ஐநா தீர்மானத்தை சீனா வலியுறுத்துவதாகவும் அவர் சொன்னார்.

சீனா வடக்கு கிழக்கில் பாரபட்சமின்றி முதலீடு செய்ய முன் வருவதாகவும், தமிழ் மக்கள் மத்தியில் இருந்து கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டால், கோரிக்கைகள் உரிய தரப்புகளுக்கு ஊடாக உத்தியோகபூர்வமாக முன் வைக்கப்பட்டால், சீனா தமிழ் மக்களுக்கு உதவக் காத்திருக்கிறது என்ற பொருள்பட அவருடைய பதில்கள் அமைந்தன. பொருளாதார மேம்பாடு அபிவிருத்தி போன்றவற்றின் மீதே அவருடைய கவனக் குவிப்பு அதிகமாக இருந்தது. ஒரு நாட்டின் உள்விவகாரத்தில் சீனா தலையிடாது என்றால் ஐநாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானங்களில் சீனா தலையிடக்கூடாது. அதாவது ஆதரவாகவும் வாக்களிக்கக்கூடாது. எதிராகவும் வாக்களிக்கக்கூடாது. ஆனால் சீனா அரசாங்கத்தை ஆதரிக்கின்றது. அங்கே மேற்கு நாடுகள் முன்வைக்கும் தீர்மானத்தை சீனா எதிர்க்கிறது. இது ஒரு தலையீடு தான்.

மனித உரிமைகள் பேரவையில் சீனா தமிழ் மக்களுக்கு எதிராகத் தலையீடு செய்கின்றது என்று பொருள். ஆனால் சீனத் தூதுவர் கூறுகிறார் தாங்கள் அரசுக்கும் அரசுக்கும் இடையிலான உறவைத ˙தான் பேணுவதாக. எல்லாவற்றையும் விட முக்கியமாக அவர் இனப்பிரச்சினைக்கு என்ன தீர்வு என்ற கேள்விக்கு கடைசிவரை பதில் சொல்லவே இல்லை. உள்நாட்டு விவகாரங்களில் சீனா தலையிடாது என்பது தான் அதற்குரிய பதிலும்.

இரண்டு மணித்தியாலங்கள் நிகழ்ந்த அச்சந்திப்பில், முதலீட்டாளர்கள் இடைக்கிடை உரையாடலின் போக்கை பொருளாதார விவகாரங்களின் மீது திருப்பினாலும், உரையாடலின் பெரும் பகுதி இனப்பிரச்சனைக்கான தீர்வை நோக்கியே மையம் கொண்டிருந்தது.

சீனத் தூதுவர் அதிகமாக பொருளாதார நடவடிக்கைகள் குறித்தே பேச விரும்பினார். தமிழ்ப் பகுதிகளில் பொருளாதார ரீதியாக நலிவுற்ற பகுதியினருக்கு சீனா உதவும் என்றும் உறுதியளித்தார்.


ஆனால் அச்சந்திப்பில் கலந்து கொண்ட தமிழர்கள் அதிகபட்சமாக இனப் பிரச்சினைக்கான தீர்வை நோக்கியே உரையாடலை இழுத்துக் கொண்டு போனார்கள். சீனத் தூதுவர் அபிவிருத்தி பொருளாதார நடவடிக்கைகள் பற்றி பேசத் தொடங்குவார். ஆனால் எந்த அபிவிருத்தியச் செய்வதாக இருந்தாலும் அதைச் செய்வதற்கான உரிமை எங்களுக்கு வேண்டும். அதை எங்கே செய்வது? எப்படிச் செய்வது? எப்பொழுது செய்வது? யாரை வைத்துச் செய்வது? போன்ற எல்லாவற்றையும் தீர்மானிக்கும் கூட்டு உரிமை தமிழ் மக்களுக்கு வேண்டும் என்பதனை அங்கு வந்திருந்த குடிமக்கள் சமூகத்தவர் திரும்பத் திரும்ப வலியுறுத்தினார்கள். அது ஒரு விதத்தில் சீனத் தூதுவருக்கு சலிப்பூட்டுவதாகவும் இருந்திருக்கலாம்.

சீனா இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் நிர்ணயகரமான விதங்களில் தலையிடாது என்பதனை அவர் அழுத்தமாக கூறினார்.அதே சமயம் அபிவிருத்தி நடவடிக்கைகளில் உதவத் தயார் என்பதையும் வெளிப்படுத்தினார். தமிழர்கள் கேட்கும் இனப்பிரச்சனைக்கான தீர்வு விடயத்தில் சீனா உதவாது என்பது தெரிந்த பின் சீனா உதவக்கூடிய விடயங்களில் தமிழ்த் தரப்பு கேட்கக்கூடியதை கேட்டிருக்கலாம் என்ற ஒரு கருத்து அங்கு வந்திருந்த முதலீட்டாளர்கள் மத்தியில் இருந்திருக்க கூடும்.

எனினும் தமிழ் மக்கள் அபிவிருத்தி மைய உரையாடல்களை விடவும் உரிமைமைய உரையாடல்களில்தான் அதிகம் கவனம் செலுத்துகின்றார்கள் என்பதே அச்சந்திப்பின் இறுதியாக பிழிவாக, சீனத் தூதரகத்துக்கு பரிமாறப் பட்ட செய்தியாக இருக்கும்.

நன்றி:- ஆதவன்


## 12,2வது ஆண்டு நினைவஞ்சலிகள்



**திரு**
**வீரகத்தி கதிர்காமு**
**திருமதி**
**கதிர்காமு தங்கம்மா**

பேராலை பளையைச் சேர்ந்தவர்களான திரு வீரகத்தி கதிர்காமு அவர்களது 12வது ஆண்டு நினைவு நாளும் திருமதி கதிர்காமு தங்கம்மா அவர்களது 2வது ஆண்டு நினைவு நாளும் 20 நவம்பர் 2023 திங்கட்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவர்களது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு வீரகத்தி கதிர்காமு திருமதி கதிர்காமு தங்கம்மா இணையர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# மீண்டும் கமரொன்:- மீண்டும் குரல் ஒலிக்குமா?



**கட்டுரையாளர்:-**
**லண்டனில் இருந்து**
**- மாலி -**

பாராளுமன்றங்களின் மாதா (Motherof Parliaments) - என்றோர் அடைமொழி பொதுவாக அரசியலில் அறியப்படுவது. இங்கிலாந்தின் வெஸ்ற்மின்ஸ்ரர் பாராளுமன்ற முறைமையைக் கொண்டதாக பல நாட்டு பாராளுமன்றங்கள் அமைந்ததில் பிரிட்டனின் பாராளுமன்றத்தை அவ்வாறு பாராளுமன்றங்களின் மாதாவாக கருதுவது வழக்காகியுள்ளது. அத்துடன், பிரிட்டிஷ் பாராளுமன்ற நடவடிக்கைகளினதும் அரசியலமைப்பு மரபுகளினதும் தொகுப்பாக விளங்கும் 'பாராளுமன்ற நடைமுறை (Parliamentary Practice) என்ற நூல் பாராளுமன்ற நடவடிக்கைகளின் பைபிளாகவும் பின்பற்றப்படுகிறது.



பிரிட்டிஷ் பாராளுமன்ற நூலகத்தில் இளம் உதவியாளர் ஒருவராகவிருந்த தோமஸ் ஏர்க்ஸ்கின் மே (Thomas ErskineMay) என்பவர், இப் பாராளுமன்ற நடவடிக்கைகளைத் தொகுத்து, 1844இல் முதன்முதலாக ஒரு வெளியீட்டைக் கொணர்ந்ததில் அதன் பெறுமானம் மதிப்புற்றது.

பின்னர், பிரிட்டிஷ் பாராளுமன்ற எழுதுவினைஞர் நாயகம் என்ற உயர் பதவியை அடைந்த அவர், மேற் சேர்க்கைகளுடன் தொடர்ந்து ஒன்பது பதிப்புகளை வெளியிட்டார். அவருக்குப் பின்னரும் அவரின் பெயருடனேயே தொடரும் 25ஆவது பதிப்பை இப்போது 'பாராளுமன்ற நடைமுறை' நூல் பெற்றிருக்கிறது.

பாராளுமன்ற நடைமுறைகளில் ஒரு 'சிக்கல் நிவாரணி'யாகும் இந் நூல், 'ஏர்க்ஸ்கின் மே' என்றே இன்று எங்கும் மேற்கோளிடப்படுகிறது. ஆனால் 'பாராளுமன்றங்களின் மாதா' என்ற பதம் உண்மையில் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தையன்றி, பிரிட்டனைக் குறித்ததாகவே முதன் முதலில் பிரயோகப்படுத்தப்பட்டது. பிரிட்டிஷ் அரசியல்வாதியும் சீர்திருத்தவாதியுமான ஜோன் பிறைற் 1865இல் நிகழ்த்திய ஓர் உரையில், பாராளுமன்றங்களின் மாதா இங்கிலாந்து என்று குறிப்பிட்டார்.

அது காலப்போக்கில் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தைக் குறித்ததாக ஆகியிருக்கிறது. ஜோன் பிறைற் கூறியது இதுவல்லவெனினும், ஏர்க்ஸ்கின் மே இக்கூற்றுக்கு ஆதாரமாகிறார்.

ஆக கடந்த வாரம் இந்த அன்னை பாராளுமன்றத்தில் மின்னாமல் முழங்காமல் நிகழ்ந்த நிகழ்வொன்று, பாராளுமன்ற நடைமுறைகளில் இப்போதைய காலகட்டத்தில் முக்கிய ஓர் அவதானத்துக்குரியதாகிறது. முன்னர் பிரதமராகவிருந்த ஒருவர், சிறிது கால இடைவெளியில் இப்போது வெளியுறவு அமைச்சராக பதவியேற்றிருக்கிறார். இவ்வழக்கு, பொதுவில் எங்கும் இல்லாததெனினும், பிரிட்டிஷ் பாராளுமன்றத்துக்கு இது புதிதானதாகவும் இல்லை.

1963-64 காலப்பகுதியில் கன்சர்வேட்டிவ் கட்சி பிரதமராகவிருந்த டக்ளஸ் - ஹோம், பின்னர் 1970-74 காலப்பகுதியில் வெளியுறவு அமைச்சராக பதவியிலிருந்தார். பிரதமராவதற்கு முன்னரும், 1960-63வரை வெளியுறவு அமைச்சராக இருந்தவர் அவர். இப்போது, 2010-16 காலப்பகுதியில் கன்சர்வேட்டிவ் கட்சி பிரதமராகவிருந்த டேவிட் கமரொன் கடந்த 13ஆம் திகதி வெளியுறவு அமைச்சராக பதவியேற்றார். அன்று காலையில் தான், ஓர் அதிர்ச்சித் தகவலாக தொலைக்காட்சிகளில் இச்செய்தி வெளியானது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் பிரிட்டன் தொடர்ந்தும் அங்கம் வகிப்பது தொடர்பான சர்வசன வாக்கெடுப்பில் (2016), இணைந்திருப்பது ஐரோப்பாவில் பிரிட்டனின் பலம் என்று, இணைப்புக்கு ஆதரவாக பிரச்சாரமிட்ட டேவிட் கமரொன், வாக்கெடுப்பு முடிவு அதற்கு மாறாக ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் வெளியேற வேண்டும் என்று அமைந்ததும் தனது பிரதமர் பதவியை இராஜிநாமா செய்து, அரசியலில் விலகியிருந்தார்.

சில சமயங்களில் அரசியலில் விடயங்கள் நாம் காண்பதை விட எளிதானவை. சில வேளைகளில் பேச்சுவாக்கில் ஒருவரிடம் ஒருவர், நீ ஏன் இதைச் செய்யக்கூடாது என்று கேட்கும்போது அவர் 'சரி' என்று சொல்லி விடுகிறார். இதற்கு இடைத்தரகர்கள் எவரும் வேண்டியதில்லை. தாங்களாகவே தீர்மானித்துக் கொள்கிறார்கள். அதுவே இங்கும் நடந்திருக்கிறது என்கிறார் முன்னாள் வெளியுறவு அமைச்சரொருவரான வில்லியம் ஹேய்க்.

பொதுவாக, இத்தகைய விவகாரங்களில் செய்தி ஊடகங்களில் முன்னதாகவே ஹேஷ்யங்கள் ஆரூடங்கள் வெளிப்பட்டு விடும். ஆனால், அப்படி எதுவுமே இல்லை. பதவியேற்பின் பின்னர் தான், வில்லியம் ஹேய்க் இதன் சூத்திரதாரியாயிருப்பாரோ என்ற செய்தி ஊடகங்களின் ஊகத்துக்கு வில்லியம் ஹேய்க் தனது ஊகத்தைத் தெரிவித்திருக்கிறார்.

பிரதமர் ரிஷி சுனக்கின் அனைத்து நடவடிக்கைகளிலும் உடன்பாடானவர் அல்லர் டேவிட் கமரொன். எனினும், இடையிடையேயான பேச்சுக்கள் இருவரிடையேயும் அவ்வப்போது இருந்திருக்கின்றன. அந்நிலையில், பிரதமர் வாசஸ்தலத்தில் 'ஒரு முள்'ளாக, கடந்த வாரம் பிரிட்டிஷ் அரசியலைப் பரபரப்புக்குள்ளாக்கி, பதவி நீக்கப்பட்ட உள்விவகார அமைச்சர் சுவெலா பிரவெமன் விவகாரம் இதற்கு வழி சமைத்ததாக நம்பப்படுகிறது. எனினும் இந்த இரகசியம் பேணப்பட்ட விதம், பிரிட்டிஷ் அரசியலில் எல்லா மட்டத்திலும் வியப்பையே ஏற்படுத்தியது. வைற்ஹோல் என்று அழைக்கப்படும் அரசாங்க வட்டாரத்தில் இந்த இரகசியம் மிக அரிதான ஒன்றாக பேசப் படுகிறது.

காஸாவில் நடைபெறும் இஸ்ரேல் தாக்குதல்களுக்கு எதிரான பலஸ்தீன ஆதரவு ஊர்வலங்களில் பொலிசார் அவர்களுக்கு சார்பாக செயல்படுகிறார்கள் என்று பொலிஸ் படைக்கு பொறுப்பான அமைச்சரான சுவெலா பிரவெமன் 'சன்டே ரைம்ஸ்' பத்திரிகையில் எழுதிய கட்டுரையில் பகிரங்கமாக தெரிவித்த கருத்து பெரும் அரசியல் கொந்தளிப்பை ஏற்படுத்தி, அவரின் இராஜிநாமாவை வற்புறுத்தியதுடன், பிரதமர் ரிஷி சுனக்குக்கு பெரும் நெருக்குதலையும் ஏற்படுத்தியது.

அமைச்சரவை மாற்றமொன்றை ஏற்கனவே சிந்தித்துக் கொண்டிருந்த பிரதமர் சுனக், இந்த வேளையில் எதிர்பார்த்தோ எதிர்பாராமலோ டேவிட் கமரொனுடன் மேற்கொண்ட வாத்சல்யமான பேச்சின் போது வில்லியம் ஹேய்க் தெரிவிக்கும் விதமாகவே தான் இது பெரும்பாலும் தீர்மானமாகியிருக்கலாம்.

ஆனால் முதல்நாள் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, முதலாம் உலகப் போரில் உயிரிழந்த படைவீரர்களுக்கான நினைவு வைபவத்தில் பிரிட்டிஷ் பிரதமர்களாக, அருகருகே நின்று அஞ்சலி செலுத்திய இவர்கள் இருவரும் மறுநாள் வெடிக்க வைக்கத் திட்டமிட்டிருந்த குண்டை எவரும் அறியவில்லை.

ஏழு ஆண்டுகளாக அரசியல் முன்னரங்கில் நான் இல்லாவிட்டாலும், பதினோராண்டுகள் கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவராகவும், ஆறு ஆண்டுகள் பிரதமராகவும் இருந்த எனது அநுபவம், பிரதமர் ரிஷி சுனக் முக்கியமான சவால்களை எதிர்கொள்ளும் இவ்வேளையில் அவருக்கு நான் உதவுவதில் துணையாகும் என்று, பதவியேற்பின் பின்னர் டேவிட் கமரொன் தெரிவித்தார்.



பாராளுமன்ற உறுப்பினர் அல்லாத டேவிட் கமரொன், பிரபுக்கள் சபை அங்கத்தவராக்கப்பட்டு, பிரபுக்கள் சபையிலிருந்து இந்த அமைச்சர் பதவியை வகிக்கிறார்.

டேவிட் கமரொன் வெளியுறவு அமைச்சராக பதவியேற்ற அதே தினம் மாலை, லண்டனின் மேயர் பிரபு (LordMayor) விருந்துபசாரத்தில் வெளியுறவு கொள்கை பற்றி உரையாற்றிய பிரதமர் சுனக், வெளிநாட்டு நெருக்கடிகள், உள்நாட்டில் பிளவுகளை உருவாக்குகின்றன என்று குறிப்பிட்டார். ஆக இந்த நெருக்கடிகளையும் பிளவுகளையும் சமாளிப்பதிலும், இவற்றுக்கு தீர்வு காண்பதிலும் பிரதமருக்கு புதிய வெளியுறவு அமைச்சர் டேவிட் கம ரொன் எப்படி துணையாகப் போகிறார்? முதல் விவகாரமாக, யுத்த முனையொன்றாகும் உக்ரைன் தலைநகருக்கு அவர் சென்றார்.

இதேவேளை, இலங்கைத் தமிழர் விவகாரத்தில் இலங்கை அரசின் நடவடிக்கைகள் தொடர்பில் சர்வதேச போர்க் குற்ற விசாரணைக்கு கடுமையான குரல் கொடுத்த முதல் வெளிநாட்டு தலைவரான டேவிட் கமரொன், இந்த விவகாரத்திலும் தனது அதே குரலை வெளிப்படுத்துவாரா?

கொழும்பில் 2013 நவம்பரில் நடைபெற்ற பொதுநலநாடுநாடுகள் உச்சி மாநாட்டை இலங்கை அரசுக்கு பெரும் கலக்கமாக ஆக்கியவர் டேவிட் கமரொன். இறுதி யுத்தத்தின் போதான மனித உரிமை மீறல்களுக்காக இலங்கை அரசின் பொறுப்புக்கூறலுக்கும், போர்க் குற்ற விசாரணைக்கும் அம் மாநாட்டு வேளையில் அவர் வற்புறுத்தி மேற்கொண்ட செயல்பாடுகள், இது தொடர்பில் மாநாட்டை திசை திருப்பியே இருந்தன.

'டேவிட் கமரொன் இந்த விடயத்துக்காக இங்கு அழைக்கப்படவில்லை' என்று தெரிவித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடனான தனித்த அவரின் சந்திப்புக்கு கடைசி வரை சம்மதம் தெரிவிக்கப்படாமலேயே இருந்தது.

இலங்கையை பிரிட்டனின் காலனித்துவ நாடு என்று நினைக்க வேண்டாம் என்று தகவல் தொடர்பு அமைச்சர் கெகலிய ரம்புக்வெல கடும் தொனியில் கர்ஜித்தார்.

இந்த விடயத்தில், டேவிட் கமரொன் கங்கணம் கட்டிய ஒருவராகவே லண்டனிலிருந்து புறப்பட்டார். இலங்கை இராணுவத்தின் மனித உரிமை மீறல்களைக் கண்டித்து இந்தியா, கனடா, மொறிசியஸ் நாட்டு பிரதமர்கள் மாநாட்டை பகிஷ்கரித்தார்கள். 53 அங்கத்துவ நாடுகளைக்கொண்ட பொதுநல நாடுகள் அமைப்பின் 37 நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்வார்கள் என இலங்கை எதிர்பார்த்த நிலையில், 27 நாடுகளே கலந்து கொண்டன. அமைப்பின் தலைவியான எலிஸபெத் மகாராணிக்கு பதிலாக, இளவரசர் சார்ள்ஸ் கலந்து கொண்டார்.

(22ம் பக்கம் பார்க்க)

# எல்லாவற்றுக்குப் பின்னாலும் யாரோ இருப்பதாகக் கூறுபவர்களுக்குப் பின்னால் இருப்பவர்கள் யார்?

2009 இற்குப் பின்னரான அரசியல் என்பது, அடிப்படையிலேயே ஒரு போர் தோல்விக்குப் பின்னரான அரசியலாகும். ஒரு போர் தோல்விக்குப் பின்னரான அரசியல் போக்கானது, கடந்த காலத்தை ஒரு ஆசானாகக் கொண்டே நகர்த்தப்பட வேண்டும்.

ஏனெனில் கடந்த காலத்தில் நிகழ்ந்தவைகள் அனைத்தும் சரியென்றால் ஒரு போதுமே தோல்வி ஏற்பட்டிருக்காது. எனவே ஒரு தோல்வி நிகழ்கின்றது என்றால் அங்கு ஏராளமான தவறுகள் நடத்திருக்கின்றது என்பதே பொருளாகும். ஆனால் நமது சூழலிலோ கடந்த காலத்திலிருந்து கற்றுக் கொள்ள எவருமே முயற்சிக்களில் சுய விமர்சனம் சார்ந்து சிந்திப்பதற்கு அனைவருமே அஞ்சினர். அதனை மறுப்பதற்கு புதிய விளக்கங்கள் புனைந்தனர்.

ஒரு பெரும் தோல்வியின் பின்னர் எழுந்து நிற்க முயற்சிக்கும் ஒரு சமூகம் செய்ய வேண்டியது சுய விமர்சனமாகும். சுய விமர்சனமின்றி எழுந்து நிற்பதை பற்றி யோசிக்கவே முடியாது. 'முதல் கோணல் முற்றிலும் கோணல்' என்பது போல் யுத்தத்திற்குப் பின்னரான தமிழ் தேசிய அரசியலில், முதல் நகலிலேயே தமிழ் தேசிய அரசியல் ஒரு முள்ளில் சிக்கிக் கொண்டது. அந்த முள்ளின் பிடியிலிருந்து இன்றுவரை தமிழ் தேசிய அரசியலால் அசைய முடியவில்லை.

யுத்தம் முடிவுற்று 14 ஆண்டுகளாகி விட்ட பின்னரும் கூட இன்று வரை முன்னோக்கி நகர்வதற்கான பாதை தெரியாமலேயே தமிழர் அரசியல் நகர்ந்து கொண்டிருக்கின்றது. இந்த இடத்தில் எவருமே தங்களை தனித்துவமானவர்கள் என்று கூற முடியாது. தமிழ் மக்களின் நலன்களை வெற்றி கொள்வதில் அனைவருமே தோல்வியாளர்கள் தான். அனைவருமே பொறுப்பாளிகள்தான். இந்த விடயத்தில் தமிழ் சமூகத்திற்கு பொறுப்புச் சொல்ல வேண்டிய கடப்பாடு அனைவருக்கும் உண்டு.

இந்த பின்புலத்தில் நோக்கினால் இரண்டு கேள்விகளை நமக்குள் கேட்டுக் கொள்ள வேண்டும். ஒன்று, ஏன் முன் நோக்கி நம்மால் பயணிக்க முடியவில்லை? இரண்டு, இந்த இடத்திலிருந்து நாம் எங்கு செல்ல முயற்சிக்கின்றோம்? இந்த இரண்டு கேள்விகளுக்கும் தமிழ்சூழலில் திடமான பதில் இல்லை. இதன் காரணமாகவே ஏராளமான பதில்களும் அந்த பதில்களை நியாயப்படுத்துவதற்கான வாதங்களும் எட்டிப் பார்க்கின்றன.

அரசியல் எப்போதுமே சாத்தியங்களின் கலையாகும் சாத்தியங்களை கையாளுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்ற போது மட்டும் தான் அது சாத்தியமான ஒன்றாகத் தெரியும். வாய்ப்புகளை தவறவிட்டால் அதன் பின்னர் முன்னைய வாய்ப்புகள் கிடைப்பதற்கு உத்தரவாதங்கள் இல்லை. இதனை இன்னொரு வகையில் கூறுவதானால், பேரூந்தை தவற விட்டு விட்டு பின்னாலிருந்து கையசைப்பதில் எந்தவொரு பயனுமில்லை. தற்போது தமிழ் தேசிய அரசியல் சூழலில் நடைபெறும் அனைத்து விவாதங்களும் இந்த அடிப்படையைக் கொண்டது தான். வாய்ப்புகளை தவற விட்டால் ஒரு சமூகத்திற்கு என்ன நடக்கும் என்பதற்கான உதாரணம் தான் ஈழத்தமிழ் சமூகத்தின் இன்றைய நிலைமை.

இந்த பின்புலத்தில் தான் தற்போதுள்ள நிலைமைக்கு ஏற்ப விடயங்களை கையாள வேண்டும். இருப்பவற்றை கொண்டு தான் சமைக்க வேண்டும் என்றவாறான கருத்தை என்னைப் போன்றவர்கள் தொடர்ந்தும் முன்வைத்து வருகின்றோம். தமிழ் மக்களின் நலனை முன்னிறுத்தி எவரெல்லாம் சிந்திக்கின்றாரோ அவர்கள் வந்தடைய வேண்டிய இடம் இது ஒன்று தான். இதனை இப்போது பலரும் புரிந்து கொள்ள முயற்சிக்கின்றனர். இந்த இடத்தில் தான் இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் கிடைக்கப் பெற்ற அரசியலமைப்பிலுள்ள விடயங்களை முதலில் கையாள வேண்டுமென்று நாம் கூறி வருகின்றோம்.



தமிழ்த் தேசியக்கட்சிகளில் பெரும் பாலானவை இந்த யதார்த்தத்தை ஏற்றுக் கொள்கின்றன. யுத்தத்திற்குப் பின்னரான தமிழ்த் தேசிய அரசியல் என்பது, அடிப்படையிலேயே வெளிநாடுகளின் மீதான நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டது தான். மனித உரிமை சார்ந்த அழுத்தங்களின் ஊடாக, இலங்கை அரசாங்கத்தை இறங்கி வரச் செய்வது தான் தமிழர் அரசியலின் பிரதான இலக்காக இருந்தது. ஆரம்பத்தில் இந்தியாவை நோக்கி கோரிக்கைகளை முன் வைப்பதில் தமிழ்த் தேசியக் கட்சிகள் பெரியளவில் ஆர்வம் காண்பித்திருக்கவில்லை, புலம்பெயர் சமூகத்தால் மேற்கு நாடுகளின் வெளிவிவகாரக் கொள்கைகளில் தாக்கங்களை ஏற்படுத்த முடியுமென்னும் தவறான நம்பிக்கையே மேலோங்கியிருந்தது.

கடந்த ஆண்டு தான் முதல் முதலாக தமிழ்த் தேசியக் கட்சிகள் இந்தியாவை நோக்கிச் சென்றிருந்தன. 6 கட்சிகள் ஒன்றிணைந்து இந்திய பிரதமருக்கு கடிதம் ஒன்றை) அனுப்பியிருந்தன. கடந்த 14 வருடங்களில் இந்தியாவின் முக்கியத்துவத்தை புரிந்து கொண்டு, தமிழ்க்கட்சிகள் ஒரு நகர்வை மேற்கொண்ட சந்தர்ப்பம் இதுதான்.

2015 இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து சம்பந்தன் தலைமையிலான தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு ,ந்தியாவை முற்றிலுமாக மறந்தே செயற்பட்டது. எவ்வாறு இந்தியாவின் உதவியில்லாமல் தனிநாடு ஒன்றை தங்களால் அடைய முடியுமென்று விடுதலைப்புலிகளின் தலைமை கருதிச் செயற்பட்டதோ அவ்வாறானதொரு அணுகுமுறை தான் சம்பந்தனிடமும் இருந்தது. அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் பற்றி எவருமே பேச வேண்டியதில்லை என்று சம்பந்தன் சூளுரைத்தார். நாங்கள் அதனைத் தாண்டி அதிக தூரம் சென்று விட்டோம் என்றார்.

ஆனால் இன்றோ, மீண்டும் தொடங்கிய இடத்திலேயே தமிழர் அரசியல் தேங்கிக் கிடக்கின்றது. சம்பந்தன் இன்னொரு வரலாற்றுத் தவறையும் இழைத்தார். அதாவது, பிராந்திய சக்தியொன்றின் தலைவரும் உலகின் சக்தி வாய்ந்த நபர்களில் ஒருவருமான இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பை கை நழுவி விட்டார். தமிழ் மக்களின் புத்திக் கூர்மையை பரிகசிக்கும் வகையில் அதற்கு பதிலளித்தார். தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதியின் மகனுக்கு திருமணம், அதனால் பிறிதொரு நேரத்தை தருமாறு இந்திய தூதரகத்திற்கு அறிவித்தார். இவ்வாறானவர்களை தங்களின் அரசியல் தலைவர்களாகக் கொண்டிருக்கும் ஒரு சமூகத்திற்கு, வெளிநாடுகள் எவ்வாறான உதவிகளை வழங்க முடியும்? அவ்வாறிருந்த போதும் இந்தியா தொடர்ந்தும் தமிழ்மக்களின் நியாயங்களுக்காக குரல் கொடுத்து வருகின்றது. இந்தியா ஒன்று தான் வடக்கு, கிழக்கை வரலாற்று வாழ்விடமாகக் கொண்டிருக்கும் ஈழத் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் நியாயமானது என்று வலியுறுத்தி வருகின்றது.

இந்தியா போதிய அழுத்தங்களை கொடுக்கவில்லை என்றவாறான ஒரு தவறான கருத்தை சிலர் முன் வைக்க முயற்சிக்கின்றனர். அத்துடன், இந்தியா தமிழ் மக்களின் நலன்களை 13 ஆவது திருத்தச் சட்டத்திற்குள் திணிக்க முயல்வதாகவும் அதற்காக பல முகவர்களை பயன்படுத்துவதாகவும் பொய்யான கருத்துகளை முன்வைக்க முயற்சிக்கின்றனர்.

2009இற்குப் பின்னரான தமிழ்த் தேசிய அரசியல் போக்கில் இது ஒரு நோயாகவே தொடர்கின்றது. யதார்த்தமாக சிந்திக்க வேண்டுமென்று எவரேனும் கூறினால் அவர்களுக்குப் பின்னால் இந்தியா இருக்கின்றது. இந்திய பிரதமர் மோடிக்கு கடிதம் அனுப்பிய போதும் அதனை விரும்பாதவர்கன், இது இந்தியாவின் நிகழ்ச்சி நிரலென்றே கதைகளைப் புனைந்தனர். இவ்வாறு எல்லாவற்றுக்குப் பின்னாலும் யாரோ ஒருவரது கை இருப்பதாக கூறுபவர்களின் பின்னாலும் யாரோ ஒருவரது கை இருக்க வேண்டுமல்லவா? ஏனெனில் இவ்வாறான பொய்யான கதைகளை பரப்ப முற்படுபவர்கள் அனைவருக்கும் இடையில் ஒரு ஒற்றுமையுண்டு. அனைவருமே இந்தியாவை சாடுபவர்களாக இருக்கின்றனர். அத்துடன், 13 ஆவது திருத்தச் சட்டத்தை ஒரு ஆரம்பப் புள்ளியாகக்கூட ஏற்றுக் கொள்ளக் கூடாதென்று வாதிடுபவர்கள். அவ்வாறாயின் இவர்களுக்குப் பின்னாலுள்ள அந்த திரைமறைவு சக்தி எது?

இலங்கையின் வடக்கு, கிழக்கு வரலாற்று ரீதியாக தென்னிந்தியாவுடன் நெருங்கிய பிணைப்பைக் கொண்டிருக்கும் பகுதியாகும். ஈழத்தமிழ் மக்களுக்கும் இந்தியாவிற்குமான பிணைப்பு மிகவும் வலுவானது. இவ்வாறானதொரு பின்புலத்தில் அண்மைக் காலமாக தமிழ் பகுதிகளுக்குள் சீனாவும் ஆங்காங்கே மூக்கை நுழைக்கின்றது. சீனாவின் ஊடுருவும் அணுகுமுறை களில் ஒன்று, சென்று ஆடுவதாகும். இதில் முதலாவது செல்வது, பின்னர் ஆடுவதா அல்லது இல்லையா என்பது இரண்டாவது. தற்போது, வடக்கு, கிழக்குப் பகுதிகளில் நிவாரணப் பொருட்களுடன் சீனா வட்டமிடுகின்றது. இவ்வாறானதொரு சூழலில், இந்தியாவை சாடும் கருத்துகள் வெளி வருவதை



கட்டுரையாளர்:-
தாயகத்தில் இருந்து
- யசீந்திரா -

எவ்வாறு சந்தேகிக்காமல் இருக்க முடியும்? சீனாவை தமிழ் தேசியவாத சக்திகள் எதிர்க்க வேண்டுமா, இல்லையா என்னும் புதிய வாழைப்பழமொன்றில் ஊசி ஏற்றுவதற்கு சிலர் முயற்சிப்பதாக தெரிகின்றது. இவர்கள் எண்ணிக்கையில் மிகவும் சொற்பமானவர்கள். ஆனாலும் வாழைப்பழத்தில் ஊசியிருப்பதை அறியாது சிலர் விழுங்கி விட்டால் அது மிகவும் ஆபத்தானது. சீனா எந்தக் காலத்திலும் தமிழர் விவகாரத்தை கருத்தில் கொண்ட நாடல்ல. அவ்வாறு கருத்தில் கொள்வதற்கான எந்தவொரு கடப்பாடும் அதற்கில்லை. தவிர, யுத்தத்திற்குப் பின்னரான, தமிழர் கோரிக்கைகளான மனித உரிமை மற்றும் நீதி என்னும் சொற்களானது, சீனாவின் கொள்கைக்குள் என்றுமே அடங்காதது. இவ்வாறான பின்புலத்தில், இந்தியாவிற்காக சீனாவை எதற்காக எதிர்க்க வேண்டும் என்னும் கேள்வியே தவறானது. உண்மையில் இது எவரையும் எதிர்ப்பது பற்றியதல்ல. மாறாக, தமிழ் மக்கள் முன்னிறுத்தும் அரசியலின் அடிப்படையில், எவருடன் பேசலாம், எவருடன் பேச முடியாது என்பதாகும்.

இந்தியா அதன் வரலாற்றுப் பொறுப்பை, சரியான தருணங்களில் நிறைவேற்றிய ஒரு நாடு. ஆனால் அன்றைய சூழலை, தமிழர் தரப்பு சரியாக கையாளவில்லை. இதனை பல்வேறு சந்தர்ப்பங்களில் இந்தக் கட்டுரையாளப் சுட்டிக் காட்டியிருக்கின்றார். வாய்ப்புகளை தவறவிட்டு விட்டு, இந்தியாவின் மீது குற்றம் சாட்டுவதில் எந்தப் பயனுமில்லை. இந்தியா ஒரு பிராந்திய சக்தி, அதே வேளை உலகின் முக்கிய சக்தி. அவ்வாறான ஒரு நாடு, அதன் நீண்டகால நலன்களை கருத்தில் கொண்டு தான் சில தீர்மானங்களை மேற்கொள்ள முடியும். நமக்கு சுடுகிற போதெல்லாம் மடியை பிடியுங்கள் என்றவாறு நாம் நாடுகளை நோக்க முடியாது. ஒரு காலத்தில் இந்தியா அதன் தோள்களை நமக்காகத் தந்தது. ஆனால் தமிழர் தரப்பு சந்தர்ப்பத்தை புத்திசாதுர்யமாக கையாளவில்லை. அதற்காக இப்போது முற்றிலும் எல்லாம் முடிந்து விட்டது என்பதல்ல அர்த்தம். இப்போதிருப்பதை உச்சளவில் பயன்படுத்திக் கொள்வது எப்படி, அதற்காக இந்தியாவை எவ்வாறு அணுகுவது என்று சிந்தித்தால் சில வாய்ப்புகள் தென்படலாம்.

12வது ஆண்டு நினைவஞ்சலி



திருமதி முருகேசு பரிமளம்

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிரு ந்த திருமதி முருகேசு பரிமளம் அவர்களின் 12வது ஆண்டு நினைவாக அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக 21 நவம்பர் 2023 செவ்வாய்க் கிழமை பாரதி இல்லம், அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள்.திருமதி முருகேசு பரிமளம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அமெரிக்காவின் முதலீடு வரமா? சாபமா?

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி நிதி நிறுவனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரி ஸ்கொட் நேதன், கடந்த 8ஆம் திகதி இலங்கைக்கு மேற்கொண்ட பயணம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. அவரது பயணம், வெறுமனே பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருக்கும் இலங்கையின் நிலையை நாடி பிடித்துப் பார்க்கும் நோக்கத்தை மாத்திரம் கொண்டதாக இருக்கவில்லை. பாரியதொரு முதலீட்டு வாய்ப்பைக் கொண்டு வந்த அவர் இந்தியப் பெருங்கடலில் தீவிரமடைந்து வரும், சீன ஆதிக்கத்துக்கு சவால் விடுகின்ற மூலோபாயத் திட்டத்துக்கு வலுச் சேர்க்கும் நோக்கத்தையும் கொண்டிருந்தார்.

கொழும்பு துறைமுகத்தின் மேற்கு கொள்கலன் முனையத்தில் அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி நிதி நிறுவனம், 553 மில்லியன் டொலரை முதலீடு செய்யவுள்ளதாக ஸ்கொட் நேதன் அறிவித்த போது அதனை பலரால் நம்ப முடியவில்லை.

ஏனென்றால், இதுவரை காலமும் இலங்கையில் இந்தளவு நிதியை அமெரிக்கா முதலீடு செய்ததில்லை. சீனாவோ, இந்தியாவோ, அல்லது ஜப்பானோ தான் பெரியளவிலான முதலீடுகளை இலங்கையில் மேற்கொள்வதற்கு முன் வந்திருக்கின்றன.

அமெரிக்கா இவ்வாறான பெரிய முதலீடு ஒன்றை இலங்கையில் மேற்கொண்டிருப்பது இதுவே முதல் முறை. அது மாத்திரமல்ல, நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி நிதி நிறுவனம் இலங்கையில் வெறுமனே 20 மில்லியன் முதலீட்டை மட்டுமே கொண்டிருந்தது.

இது தற்போது 1 பில்லியன் டொலர்களாக அதிகரித்திருக்கிறது என்று அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி நிதி நிறுவனத்தின் 'எக்ஸ்' பக்கத்தில் பதிவிடப்பட்டுள்ளது. அதாவது நான்கு ஆண்டுகளுக்குள் அமெரிக்கா ஒரு பில்லியன் டொலரை இலங்கையில் முதலிடுகிறது என்றால், அதனை சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாது.

இந்தோ - பசிபிக் பிராந்தியத்திலேயே அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி நிதி நிறுவனத்தின் இரண்டாவது பெரிய முதலீட்டுச் சந்தையாக ,லங்கை விளங்குகிறது என்று அமெரிக்க தூதுவர் ஜீலி சங் எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டிருக்கிறார். கொழும்பு மேற்கு கொள்கலன் முனையத்தில் அமெரிக்காவின் முதலீடு, ஆசியாவில் அமெரிக்க அரசு நிறுவனத்தின் மிகப் பெரிய உள்கட்டமைப்பு முதலீடாகும் என்பதுடன் உலகளவில் மிகப்பெரியது எனவும், 'சீ ட்ரேட் மெரிடைம் நியூஸ்' என்ற ஊடகம் குறிப்பிட்டிருக்கிறது.

இது இலங்கையில் பொருளாதாரத்தை மேல் உயர்த்துவதற்காகவோ, துறைமுக கட்டமைப்பை விருத்தி செய்ய வேண்டும் என்பதற்காகவோ மேற்கொள்ளப்பட்ட ஒரு நகர்வு அல்ல. இது சீனாவுக்கு நேரடியாகச் சவால் விடுகின்ற ஒரு நகர்வு. நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் கிழக்கு கொள்கலன் முனையத் திட்டத்தில் இந்தியா மற்றும் ஜப்பான் கூட்டாக முதலீடு செய்வதற்கும், கொழும்பு நகரில் இலகு ரயில் போக்குவரத்து வலையமைப்பை உருவாக்குவதில் ஜப்பான் 1.5 பில்லியன் டொலரையும் முதலீடு செய்வதற்கும் முன் வந்தன.



அதற்குப் பின்னால் அமெரிக்காவே இருந்தது. ஆனால் கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரத்துக்கு வந்தவுடன், இந்த இரண்டு திட்டங்களையும் இடை நிறுத்தினார். இதனால் இந்தியா, ஜப்பான் ஆகிய நாடுகள் கடும் கோபமடைந்தன. சீனாவுக்குச் சார்பாக செயற்படுவதாக கருதி, கோட்டா அரசாங்கம் எடுத்த அந்த முடிவினால், இன்று வரையில் ஜப்பானிய அரசாங்கத்தின் முதலீடுகளைப் பெற்றுக் முடியாத நிலை காணப்படுகிறது. எவ்வாறாயினும், இந்தியாவை சமாதானப்படுத்தி, மேற்கு கொள்கலன் முனையத்தை அமைப்பதில் அதானி குழுமத்தை முதலீடு செய்வதற்கு இணங்கச் செய்தது கோட்டா அரசாங்கம். 2021ஆம் ஆண்டு இதற்கான உடன்பாடு கையெழுத்திடப்பட்டது.

இதன்படி 789 மில்லியன் டொலரை முதலீடு செய்யும் அதானி குழுமம், கொள்கலன் முனையத்தை அபிவிருத்தி செய்து இயக்கி ஒப்படைப்பது என உடன்பாடு செய்து கொண்டது. இதற்கமைய, 51 சதவீத பங்குகளை அதானி குழுமமும், 34 சதவீத பங்குகளை ஜோன் கீல்ஸ் நிறுவனமும், 15 வீத பங்குகளை துறைமுக அதிகார சபையும் கொண்டிருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த முதலீட்டுத் திட்டத்தை வலுப்படுத்துவதற்காகவே, அமெரிக்கா 553 மில்லியன் டொலரை முதலீடு செய்ய முன் வந்திருக்கிறது. ஏற்கெனவே இணங்கிக் கொள்ளப்பட்ட ஒரு உடன் பாட்டை விரைவுபடுத்துவதற்காக இந்த முதலீட்டைச் செய்வதில் அமெரிக்கா ஈடுபாடு காட்டுகிறது.

இது சீனாவுக்குப் போட்டியாக இலங்கைத் துறைமுகங்களை விருத்தி செய்து கட்டுப்படுத்துவதில் அமெரிக்கா தீவிர கவனம் செலுத்துகிறது என்பதை வெளிப்படுத்தியிருக்கிறது. ஜப்பான், இந்தியா போன்ற நாடுகளைக் கொண்டு சீனாவுடன் போட்டி போட்டு வந்த அமெரிக்கா, இப்போதே சீனாவுடன் தானே நேரடிப் போட்டிக்கு குதித்திருப்பதும் உன்னிப்பாக அவதானிக்க வேண்டிய விடயம். ரணில் விக்கிரமசிங்கவின் சீனப் பயணத்துக்குப் பின்னர் நிலைமைகளில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

இலங்கையில் சீனாவின் முதலீடுகள் அதிகரிக்கும் சூழல் உருவாகியிருக்கிறது. அம்பாந்தோட்டையில் 1.5 பில்லியன் டொலர் செலவில் பாரிய எண்ணெய் சுத்திகரிக்கும் நிலையம் ஒன்றை ஆரம்பிக்கும் உடன்பாடும் சீனாவுடன் விரைவில் கைச்சாத்திடப்படவுள்ளது. அதே வேளை, பெய்ஜிங்கில் நடந்த பி.ஆர்.ஐ மாநாட்டில் உரையாற்றிய சீன ஜனாதிபதி ஸி ஜின்பிங், அடுத்த 10 ஆண்டுகளில், பி.ஆர்.ஐ திட்டங்களில் சீனா 100 பில்லியன் டொலரை முதலீடு செய்யும் என்று அறிவித்திருந்தார். சீனாவின் முதன்மையான கரிசனை கொண்ட நாடுகளின் வரிசையில் இலங்கையும் ஒன்று. இவ்வாறான நிலையில் அடுத்த பத்து ஆண்டுகளில் சீனா மேற்கொள்ளவுள்ள 100 பில்லியன் டொலர் முதலீட்டில் குறிப்பிட்டளவு நிதி இலங்கைக்கும், வருவதற்கு வாய்ப்புகள் உள்ளன. இவையெல்லாம் அமெரிக்காவுக்கு நெருக்கடியை தோற்றுவித்துள்ளது.

மாலைதீவு ஜனாதிபதியின் பதவியேற்பு நிகழ்வுக்குச் சென்ற சீன ஜனாதிபதி ஸி ஜின்பிங்கின் விசேட தூதுவர் ஷென் யிகின் கொழும்புக்கு வந்திருக்கிறார். 21ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருந்த அவர் ஜனாதிபதி உள்ளிட்ட பல்வேறு தரப்பினரையும் சந்தத்தார்.

சீன ஜனாதிபதியின் விசேட தூதுவர் ஒருவர் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படுவது அண்மைய தசாப்தங்களில் நடந்திராத ஒன்று. இவ்வாறான பிரதிநிதியின் வருகை இலங்கையில் சீனாவின் முதலீடுகள் மற்றும் தலையீடுகள் அதிகரிப்பதற்கான வாய்ப்பை இன்னும் அதிகரிக்கச் செய்திருக்கிறது.

இத்தகைய நிலையில் தான் மேற்கு கொள்கலன் முனையத் திட்டத்தை விரைவுபடுத்துவதற்காக. 533 மில்லியன் டொலர் நிதியை முதலீடு செய்ய அமெரிக்கா முன் வந்திருக்கிறது. இலங்கையில் சீனா, ஏற்கனவே துறைமுகங்களில் முதலீடு செய்திருக்கிறது. அம்பாந்தோட்டை துறைமுகத்தை 99 வருட குத்தகைக்கு பெற்றிருக்கிறது. அதனை எந்த நேரத்திலும் தனது இராணுவத் தேவைக்கு ஏற்றதாக மாற்றியமைக்கலாம் என அமெரிக்கா கருதுகிறது.

அண்மையில் அமெரிக்க சிந்தனைக் குழாம் ஒன்று வெளியிட்ட அறிக்கையிலும் கூட, இலங்கை, மியான்மார், பெரு, பிரேஸில் போன்ற நாடுகளில், சீனா பெரும்பான்மை உரிமையை வைத்திருக்கும் துறைமுகங்களை கடற்படைத் தளமாக மாற்றக் கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையை சீனா தனது கடற்படைத் தளமாக மாற்றக் கூடும் என்று அமெரிக்கா பலகாலமாகவே எச்சரித்து வருகிறது. ஆனால் அம்பாந்தோட்டை துறைமுகம் ஒரு வர்த்தக முதலீடு என்று சீனாவும், இலங்கையும் தொடர்ச்சியாக கூறி வந்திருக்கின்றன. ஆனால் அதனை அமெரிக்காவோ, இந்தியாவோ நம்பவில்லை. உலகின் முக்கிய துறைமுகங்களை அபிவிருத்தி



செய்து, அதன் ஊடாக தனது ஆதிக்கத்தை விரிவுபடுத்த சீனா முற்படுகின்ற நிலையில், அமெரிக்காவும் இப்போது நேரடியாக தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்த திட்டமிட்டுள்ளது. அதன் ஒரு கட்டம் தான் மேற்கு கொள்கலன் முனையத்தில், அமெரிக்காவின் முதலீடு ஆகும்.

இந்த முதலீட்டின் மூலம் இலங்கை மீதான அமெரிக்காவின் கவனம் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது என்பது உறுதியாகியுள்ளது. இந்த கவனமானது, பிராந்தியத்தில் சீனாவுக்கு எதிரான வியூகங்கள் வலுப்படுத்தப்படும் சூழலை உருவாக்கியுள்ளது.

ஆக மொத்தத்தில் இலங்கையை மையப்படுத்திய முதலீட்டு யுத்தம் இப்போது தொடங்கி விட்டது. இது இலங்கையை பொருளாதார ரீதியாக உயர்த்தி விடுமா அல்லது பிராந்தியச் சிக்கலுக்குள் இன்றும் தீவிரமாக மாட்டி விடுமா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

## 3வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி துரைராஜா இராசமணி

கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி துரைராஜா இராசமணி அவர்களின் மூன்றாவது ஆண்டு நினைவுநாள் 21 நவம்பர் 2023 செவ்வாய்க் கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி துரைராஜா இராசமணி அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# தமிழரின் ஐக்கியக் கனவு?

தமிழ் மக்களுடைய விடுதலைக்கு ஐக்கியம் வேண்டும் என்ற குரல் வலியுறுத்தல் தொடர்ந்து முன் வைக்கப்படுகிறது. கடந்த வாரம் கூட யாழ்ப்பாணத்தில் வடக்குக் கிழக்கு சிவில் சமூகம் என்ற தரப்பினர் முன்னெடுத்த கருத்தரங்கிலும் ஐக்கியத்தின் அவசியத்தைப் பற்றிப் பேசப்பட்டது. இந்த ஐக்கியக் குரலுக்கு ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலிருக்கும். ஆனால், அது உருவாகாத, உருப்படாத சவலையாகவே உள்ளது மட்டுமல்ல, ஐக்கியத்திற்கு எதிர் நிலையிற் தான் நடைமுறைகள் உள்ளன.

அதாவது ஐக்கியத்தை வலியுறுத்துவோரும் சரி, ஐக்கியத்தை உருவாக்க வேண்டிய சக்திகளும் சரி ஐக்கியப்பட வேண்டிய தரப்பினரும் சரி, ஐக்கியத்துக்கு எதிரானதாகவே செயற்படுவதைக் காண்கிறோம். இவற்றின் அக புற நிலைகள் ஐக்கியத்துக்கு ஒருபோதுமே சாத்தியமாக இல்லை. இதைக் குறித்து இந்தக் கட்டுரைத் தொடர் ஆராய முற்படுகிறது.

தமிழர்களுக்கு நியாயமான தீர்வு கிட்ட வேண்டும் என்றால், அதற்கு 'தமிழ்த்தரப்பிலுள்ள சக்திகள் அனைத்தும் ஒன்றிணைய வேண்டும். ஐக்கியப்பட வேண்டும். அப்போது தான் ஒருமுகப்பட்ட தீர்வைக் குறித்துப் பேசவும் அழுத்தம் கொடுக்கவும் முடியும். பிராந்திய சக்தியாகிய இந்தியா, சர்வதேச சமூகம் மற்றும் இலங்கை அரசு என எதனோடு பேசுவதற்கும் இந்த ஒருங்கிணைவும் ஒரு நிலைப்பட்ட கோரிக்கையும் அவசியமாகும் என்று பொதுவாகச் சொல்லப்படுகிறது.

இங்கே இவ்வாறு ஐக்கியத்துக்காக அர்த்தப்படுத்தப்படுவது, வலியுறுத்தப்படுவது இன்றைய தமிழ்த்தேசியச் சக்திகளை அப்படித் தம்மை அடையாளம் காட்ட முற்படும் தரப்புகளை மனதிற் கொண்டேயாகும். ஆனால் இதுவே தவறான புரிதலாகும்.

இவை மட்டும் ஐக்கியமாகினால் அது தமிழ்த்தரப்பு என்றாகி விடாது. ஒரு அரசியற் சூழலில், அதுவும் ஜனநாயக முன்னெடுப்பிலுள்ள அரசியற் சூழலில் தனியே ஒற்றைப் படையான தரப்புகள் மட்டும் முழுமையான அடையாளத்தையும் பிரதிநிதித்துவத்தையும் கொள்ள முடியாது. ஏன் ஆயுதப்போராட்ட அரசியற் சூழலில் கூட அது பொருத்தமாவதில்லை.

விடுதலைப்புலிகளின் காலத்திலும் இந்தப் பிரச்சினை இருந்தது. புலிகள் இதை மறுதலித்துத் தாமும் தம்மால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஏக பிரதிநிதித்துவத்துக்குரியன என்று வாதிட்ட போதும் அதை இலங்கை அரசு மட்டுமல்ல, உலகமும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கவில்லை. அப்பொழுது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் 22 பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்தனர் என்பது கவனிக்கப்பட வேண்டியது.

அப்படி அதை ஒரு அங்கீகாரமாகக் கொண்டிருந்தால் புலிகளும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் அரசியல் அங்கீகாரத்துடன் தொடர்ந்தும் இருந்திருக்கும் நிலை உருவாகியிருக்கும்.

புலிகள் தான் ஆயுதப் போராட்ட அமைப்பு. ஆகவே அவர்களுக்குப் பிரச்சினை என்றால், மக்களால் அங்கீகரிக்கப்பட்ட தெரிவு செய்யப்பட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அங்கீகாரத்துடன் இருந்திருக்கும். ஆனால், அப்படி எதுவும் நடக்கவில்லை. நடக்கவும் மாட்டாது. இதுதான் இன்றைய உலக நியதி.

இப்பொழுது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பே உடைந்து பல துண்டுகளாகி விட்டது. ஆக ஐக்கியத்துக்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிலிருந்த சக்திகளை தரப்புகளை முதலில் கொண்டு வர வேண்டும். அது சாத்தியமா?

இல்லை என்பதே வெளிப்படையான உண்மையான பதில். ஏனென்றால் அவை ஒன்றும் எளிதாக உடைந்து பிரிந்து செல்லவில்லை. உடைந்தோ பிரிந்தோ செல்வதற்கான ஆழமான அரசியற் கொள்கை வேறுபாடுகள் இவற்றிற்கிடையே இல்லை என்றாலும் இவற்றின் நடைமுறைப் பிரச்சினைகளும் மனநிலையும் ஆழமானவை. எளிதில் தீர்த்துக் கொள்ள முடியாதவை. அதாவது இவற்றில் அடிப்படையான பண்பு மாற்றம் நிகழாமல், வெறுமனே தீர்வு காண இணைய முடியாதவை. அந்தப் பண்பு மாற்றத்தை



நிகழ்த்துவதற்கான அரசியற் தெளிவு, கொள்கையின் மீதான உறுதிப்பாடு, வாழ்க்கை முறைமை, மனநிலை, அறிவு போன்றவையும் இந்தத் தரப்பினரிடத்தில் இல்லை என்பதால் தான் தமிழரசுக் கட்சியை விட்டு, (கூட்டமைப்பை விட்டு) வெளியேறிய சக்திகள் கூட தனித்தனியாக உடைந்தும் பிரிந்தும் (தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம், தமிழ் மக்கள் கூட்டணி, தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்), ஈழத்தமிழர் சுயாட்சிக் கழகம் போன்றவை) நிற்கின்றன.

இன்னொரு நிலையில் தமிழரசுக் கட்சியே உடையக் கூடிய நிலையிற் தான் உள்ளது. அதற்குள்ளிருக்கும் தலைமைத்துவப் போட்டியும் அணிப் பிளவுகளும் வெளிப்படையானவை. ஏனைய கட்சிகளிலும் அவற்றின் தலைவர்களைக் கடந்து அடுத்த நிலையாளர்கள், அடுத்த கட்டத்தலைவர்கள் என எவரும் இல்லை. ஆகவே அவையும் எப்போது பொறிந்து விழும் என்று தெரியாத நிலையிலேயே உள்ளன.

இவ்வளவுக்கும் இவை அனைத்தும் ஒற்றுமையையும் ஐக்கியத்தையும் வலியுறுத்திக் கொண்டிருப்பவை. ஆகவே இங்கே ஐக்கியம் ஒற்றுமை ஒருங்கிணைவு என்பதெல்லாம் வெறுமனே வாயால் உச்சரிக்கப்படுகிறதே தவிர, அது ஆத்மார்த்தமாக உள்ளார்ந்த எண்ணமாக உருக் கொள்ளவில்லை. அப்படி உண்மையாகவே, ஆத்மார்த்தமாக ஐக்கியத்தைப் பற்றிச் சிந்தித்திருந்தால், ஐக்கியத்தின் தேவையை உணர்ந்திருந்தால் இவை சகிப்புத்தன்மையோடும் விட்டுக் கொடுப்புகளோடும் ஐக்கியப் பட்டிருந்திருக்கும். அல்லது இப்போது கூட எளிதாக (நிபந்தனைகளின் அடிப்படையிலோ நிபந்தனையின்றியோ) ஐக்கியப்பட்டிருக்கும் என்பதால் ஐக்கியத்தைப் பற்றிய ஆழமான ஈடுபாடு இவற்றுக்குக் கிடையாது. அதில் நம்பிக்கையும் இல்லை.

ஆனால், வெளி நிர்ப்பந்தங்களுக்காகவே ஐக்கியம் பற்றிப் பேசுகின்றன் ஐக்கியம் பற்றிய உரையாடல்களில் கலந்து கொள்கின்றன. அங்கும் கூட தமது தனியான மனநிலையை விட்டு விட்டு அவற்றில் பங்கேற்பதில்லை. கூட்டுணர்வு கொள்வதில்லை.

இதை நாம் இவற்றின் அகநிலைப் பிரச்சினையாகப் பார்க்க முடியும். ஒவ்வொரு கட்சிக்கும் அவற்றின் தலைமைக்கும் உள்ள உளப் பிரச்சினையாக இதுள்ளது. இதற்குள் இவற்றின் அரசியல் இருப்புப் பற்றிய பிரச்சினை முக்கியமானது. அதை முன்னிலைப்படுத்திச் சிந்திப்பதன் விளைவே இந்தச் சிக்கலாகும்.

புறநிலையில் அழுத்தங்கள் இருந்தாலும் அதை அகநிலைப் பிரச்சினைகள் தள்ளி விடுகின்றன. உண்மையில் அகநிலையில் ஐக்கியம் பற்றிய உணர்விருந்தால் ஈடுபாடிருந்தால் புறநிலையைக் கடந்தும் ஐக்கியம் சாத்தியமாகும். மட்டுமல்ல, அந்த ஐக்கியம் வலுவானதாகவும் இருக்கும். இது புறநிலை அழுத்தத்தையே எதிர்த்து வெளித்தள்ளி விடக்கூடிய அகநிலைப் பிரச்சினையாக அல்லவா உள்ளது. எனவே தான் இன்றைய நிலையில் ஐக்கியம் ஒற்றுமை சாத்தியமில்லை என்ற அறுதியிட்டுக் கூற முடிகிறது. அதை மீறிச் சொல்வதாக இருந்தால் அதொரு பாவனையாக — நாடகமாக இருக்குமே தவிர, அதில் உண்மை எதுவும் இருக்காது. அரசியலில் பிரதானமாக இரண்டு அல்லது மூன்று வகையான சூழலில் ஐக்கியத்துக்கான சந்தர்ப்பங்களும் வாய்ப்புகளும் இருப்பதுண்டு.

ஒன்று, புற அழுத்தங்களின் போது தேர்தல் அல்லது பேச்சுவார்த்தை அல்லது வெளிச் சக்திகளின் அழுத்தம் என வரும்போது. இது அந்தச் சூழலை எதிர்கொள்வதற்கான தற்காலிக ஏற்பாடாக இருக்கும். சிலவேளை இதிலிருந்து தொடங்கி ஒரு வலுவான கூட்டாகவும் ஐக்கியமாகவும் தொடரவும் கூடும். ஆனால், அந்த வெளி அழுத்தம் குறையும் போதும் உள்ளே போட்டிகள் வலுக்கும் போதும் உடைவு சாதாரணமாக நிகழ்ந்து விடும். கூட்டமைப்பின் உடைவு இதற்கு உதாரணம்.

இதில் இன்னொன்றும் உள்ளது. ஒடுக்குமுறை அல்லது பிரச்சினையை எதிர்கொள்வதற்காக (Based on the issues) சில வேலைத்திட்டங்களின் அடிப்படையில்

**கட்டுரையாளர்:-**
**கிளிநொச்சியில் இருந்து**
**– கருணாகரன் –**



அல்லது பொதுப் பிரச்சினைக்கு முகம் கொடுக்கும் அடிப்படையில் ஒன்றிணைந்து செயற்படுவது ஐக்கியப்படுவது என்பதாக இதிருக்கும். இப்படிச் செயற்பட்டு வரும்போது ஏற்படுகின்ற புரிந்துணர்வு, உறவு, அனுபவம் போன்றவற்றின் அடிப்படையில் இந்த ஐக்கியத்தை ஒற்றுமையை வலுப்படுத்திக் கொள்ள முடியும். ஆனால், அதற்கும் இவற்றின் உளநிலை பொருத்தமாக இல்லாமலே உள்ளது.

அவ்வப்போது நிகழ்கின்ற போராட்டங்கள், பொதுப்பிரச்சினைகளுக்கான முகம் கொடுத்தல்களில் இந்தச் சக்திகளிற் சில அப்படியான ஒரு தோற்றத்தைக் காட்டுகின்றன. ஆனால், இதை நிதானமாக அணுகி வளர்த்தெடுத்தால் ஓரளவுக்கு ஐக்கியத்தை ஒற்றுமையை வலுப்படுத்தலாம்.

இரண்டாவது, இந்தக் கட்டுரை பேச முற்படுகின்ற ஒரு பகுதியான மெய்யான ஐக்கியத்தை எட்டுவதற்கு உருவாக்குவதற்கு கொள்கை ரீதியாகவும் (Based on principle) தீர்வுக்கான தேவையின் அடிப்படையிலும் மேற்கொள்கின்ற உறவாகும். இது சற்றுக் கடினமானது. ஆனால், இதில் தெளிவேற்பட்டு, அந்தத் தெளிவின் அடிப்படையில் கட்டியெழுப்பப்படுகின்ற ஐக்கியமானது உறுதியாகவும் ஓரளவுக்கு நிரந்தரத் தன்மை உடையதாகவும் இருக்கும். அதுதான் பலமானது. ஏனெனில் அது கொள்கை ரீதியானது. ஐக்கியம் என்றால் என்ன, எந்த அடிப்படையிலானது என்ற தெளிவுடன் மேற்கொள்ளப்படுவதால் இது பலமானது, வலுவானது. இங்கே இவை எதற்குமான வாய்ப்புகள் இல்லை. என்பதால் தான் ஐக்கியம் ஒற்றுமை நிகழ மறுக்கிறது. (தொடரும்)




# இந்தியாவில் ஆளுநர் பதவி அகற்றப்பட வேண்டியது! தனித் தீர்மானத்தை முன் மொழிந்து முதல்வர் உரை!



ஆளுநர் பதவி என்பதே அகற்றப்பட வேண்டிய பதவி. அகற்றப்பட வேண்டிய பதவியாக இருந்தாலும், அது இருக்கும் வரை மக்களாட்சிக்கு உட்பட்டு ஆளுநர் செயல்பட வேண்டும் என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தமிழக ஆளுநர் திருப்பி அனுப்பிய மசோதாக்களை மீண்டும் நிறைவேற்றி அனுப்புவதற்காக தமிழக சட்டப்பேரவையின் சிறப்பு கூட்டம் இன்று (நவ.18) காலை கூடியது. அவை கூடியவுடன் சபாநாயகர் அப்பாவு மறைந்த முக்கியப் பிரமுகர்கள், முன்னாள் உறுப்பினர்களுக்கு இரங்கல் தெரிவிக்கும் தீர்மானங்களை வாசிக்க அவை உறுப்பினர்கள் 2 நிமிட மவுன அஞ்சலி செலுத்தினர்.

பின்னர் முதல்வர் ஸ்டாலின் அரசினர் தனித் தீர்மானத்தை முன்மொழிந்தார். ஆளுநர் திருப்பி அனுப்பிய 10 மசோதாக்களையும் மீண்டும் நிறைவேற்றும் வகையில் தீர்மானத்தை அவர் கொண்டு வந்தார். அப்போது பேசிய முதல்வர், எனது உடல் நலனை விட மாநில மக்களின் நலனே முக்கியம். இந்திய ஜனநாயகம் மிக மோசமான நிலையில் உள்ளது. மக்களாட்சி தத்துவத்தின்படி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசால் நிறைவேற்றி அனுப்பப்படும் மசோதாவுக்கு ஒப்புதல் அளிப்பது ஆளுநரின் கடமை. இது தொடர்பாக சட்ட ரீதியாக அல்லது நிர்வாக ரீதியாக விளக்கம், சந்தேகம் இருந்தால் அரசிடம் கேட்கலாம். ஒரு போதும் ஆளுநர் கோரிய விளக்கங்கள் கொடுக்கப்படாமல் இருந்ததில்லை.

ஆனால் ஆளுநர் ரவி தனிப்பட்ட விருப்பு, வெறுப்புகளால், சட்டமுன்வடிவுகளை திருப்பி அனுப்பியிருப்பது, தமிழ்நாட்டு மக்களையும், சட்டமன்றத்தையும் அவர் அவமதிக்கிறார் எனப் பொருள். இது சட்டவிரோதம், மக்கள் விரோதம், ஜனநாயக விரோதம், மனசாட்சி விரோதம், அதையும்விட சட்ட மன்றத்தின் இறையான்மைக்கு எதிரானது.

மத்திய அரசின் இடையூறுகள் இல்லாமல் இருந்தால் இன்னும் பல திட்டங்களை தமிழக அரசால் செயல்படுத்த முடியும். மத்திய அரசிடம் ஆளுநருக்கு இருக்கும் நெருக்கத்தைப் பயன்படுத்தி அவர் தமிழ்நாட்டுக்கான நிதியை பெற்றுத்தர முயற்சிக்கலாம். ஜிஎஸ்டி நிலுவைத் தொகையை பெற்றுத் தரலாம். எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுவதற்கு உரிய நிதியை பெற்றுத் தரலாம். புதிய ரயில்வே திட்டங்களைப் பெற்று தரலாம். மாநில அரசுக்கும், மத்திய அரசுக்கும் இடையே பாலமாக இருக்கலாம். ஆனால் இதில் எதையும் செய்யாமல் மாநில அரசின் திட்டங்களுக்கு எவ்வாறு முட்டுக்கட்டை போடலாம் என நாள் தோறும் யோசித்து யோசித்து செயல்பட்டு வருகிறார்.

விழாக்களுக்கு செல்கிறார்.செல்லட்டும் ஆனால் விதண்டாவாதமாக கருத்துக்களை சொல்லிக் கொண்டிருக்கிறார். அரசின் கொள்கைகள் குறித்து பொது வழியில் விளக்கம் அளிப்பதும், விவாதம் செய்வதும் அவர் வகிக்கும் பதவிக்கு அழகு கிடையாது. தமிழ்நாட்டில் பின்பற்றப்படும் திராவிட கொள்கை, சமத்துவம், சமூக நீதி, பகுத்தறிவு மற்றும் சுயமரியாதை ஆகியவை மக்களின் மனங்களில் இருப்பதை அவரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அவரின் அபத்தமான கருத்துக்களுக்கு அரசியல் கட்சித் தலைவர்கள் மறுப்பு செய்திகளை உடனுக்குடன் வெளியிட்டு வருகின்றனர்.

தமிழ்நாடு வளர்ந்து வருவதை காண பொறுக்காமல் ஆளுநர் இத்தகைய செயல்களை செய்து வருவதாக நடு நிலையாளர்கள் கருதுகிறார்கள். அரசியலமைப்பு சட்டத்திற்கு முழுவதும் மாறாக ஆளுநர் மோதல் போக்கை கடை பிடித்து வருகிறார். எனவே அவருக்கு உரிய அறிவுரைகளை வழங்குமாறு இந்திய குடியரசு தலைவர் அவர்களுக்கு, தமிழக அரசின் சார்பில் கடிதம் எழுதப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்த கோரிக்கைகள் குறித்து வலியுறுத்தி இருக்கிறார்கள். நானும் இந்திய பிரதமருக்கு இந்த பிரச்சினை குறித்து கடிதம் எழுதி இருக்கிறேன். இந்த அனைத்து முயற்சிகளும் எந்தவித பயனும் தராததால்தான் தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தின் கட்சி கதவுகளை தட்ட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

பாஜக ஆட்சி இல்லாத மாநிலங்களில் ஆளுநர் மூலமாக பிரச்சினைகளை உருவாக்கி வருகிறார்கள். ஆளுநர் பதவி என்பதே அகற்றப்பட வேண்டிய பதவி. அகற்றப்பட வேண்டிய பதவியாக இருந்தாலும், அது இருக்கும் வரை மக்களாட்சிக்கு உட்பட்டு செயல்பட வேண்டும் ' என்று கூறினார்,

முதல்வர் பேசியதை அடுத்து சபாநாயகர் அப்பாவு, ஆளுநரை விமர்சிக்காமல், தனிப்பட்ட விமர்சனங்களைக் கூறாமல் தீர்மானத்தின் மீது பேசலாம் என்று சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு அனுமதியளித்தார்.




வங்கிக் கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

Save 80%


- கடன் 80% குறைய நடவடிக்கை
  Reduce your debts upto 80%.
- கடனுக்கு விடுவிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுதப்படும்
  Stop all interest on your debts.
- கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
  Stop collection calls, legal action & garnishments.
- உங்கள் சொத்துகள் பாதுகாக்கப்படும்.
  Protect all your assets (House, Car, RRSP, RESP).
- மாதாந்த ரீதியில் அனைத்துக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்.
  Make one monthly patment to all of your creditors.
- வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்.
  GIve you solutions without bankruptcy.

CRC CREDIT RECOVERY CANADA

10 Milner Business Court, Unit 300
Website: www.creditrecoverycanada.ca

Suren Sornalingam BBA
Post Graduate Diploma In Business Management
Federal Government Registered & Certified (BIA) Insolvency Counsellor.
Member of Canadian Insolvency Foundation

Over 20 Years Experience in the field of Insolvency



Tel: 647-274-2832
Email: info@creditrecoverycanada.ca

# வரலாற்றுச் சமர் 30 ஆண்டுகள்:- “ஒப்பரேஷன் தவளைப் பாய்ச்சல்”

## மறந்து போகுமோ என் இனம் எம் வீர மறவர்களின் வீர காவியத்தை?

முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் இதே உலக ஊடகங்கள் பூநகரி என்ற பெயரை உச்சரித்துக் கொண்டிருந்தன. பூநகரியில் அமைந்திருந்த பாரிய கூட்டுப் படைத் தளம் மீது விடுதலைப் புலிகள் தொடுத்த பாரிய தாக்குதல் தான் அதற்குக் காரணம்.

‘ஒப்பரேசன் தவளை’ என்ற பெயரில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதல், அந்தக் காலகட்டத்தில் சர்வதேச அளவில் மிகப்பெரிய கவனத்தை ஈர்த்தது.

நாகதேவன்துறை, சங்குப்பிட்டி இறங்குதுறை பூநகரி, பள்ளிக்குடா, கூமர், கௌதாரி முனை, கல்முனை என கிட்டத்தட்ட 16 கிலோமீற்றர் நீளத்தில், 29 கிலோமீற்றர் சுற்றளவில், 30 கிலோ மீற்றர் பரப்பளவில், பரந்து விரிந்து கிடந்த அந்த படைத்தளம் மீது விடுதலைப் புலிகள் ஈரூடகத் தாக்குதலை நடத்தியிருந்தனர்.

வில்லடியில் கட்டளை முகாம் நாக தேவன் துறையில் படகுத் தளம், ஞானி மடத்தில் கடற்படைத் தளம், கூமரில் இறங்குதுறையுடன் கூடிய முகாம், பள்ளிக்குடா மற்றும், ஆலடியில் இரண்டு முகாம்கள், பள்ளிக்குடாவுக்கும், கூமருக்கும் இடையில் ஒரு விநியோக முகாம் என– 7 பிரதான இராணுவ, கடற்படை முகாம்களைக் கொண்டிருந்தது அந்த பெருந்தளம்.

12 அதிகாரிகளும் 288 படையினரும் என, மொத்தம் 300 கடற்படையினரும், – 56 அதிகாரிகளும், 2236 படையினருமாக மொத்தம் 2292 இராணுவத்தினர் என, மொத்தம் 2592 அரச படையினர் அங்கு நிலைகொண்டிருந்தனர்.

லெப்.கேணல் ரஞ்சித் சில்வா தலைமையில் 1ஆவது இலகு காலாட்படை, மேஜர் லலித் தவுலகல தலைமையில் 3ஆவது கஜபா ரெஜிமென்ட் ஆகிய இரண்டு பற்றாலியன்கள் நிலை கொண்டிருந்த அந்த படைத்தளத்தில் கடற்படையின் மூன்று உப படைப்பிரிவுகளும், 6 நீரூந்து விசைப்படகுகளும், இராணுவத்தின், கவசப் படைப்பிரிவின் இரண்டு ரி 55 பிரதான சண்டை டாங்கிகளும், 120 மில்லிமீற்றர் மோட்டார்களுடன், ஆட்டிலறிப் படைப்பிரிவின், ஒரு பட்டரியும் தளத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக நிறுத்தப்பட்டிருந்தன.

படைபலம் மற்றும் ஆயுத பலத்தினால் வீழ்த்த முடியாத இலக்காக அது கருதப்பட்டது. தேவைப்படும் போது, பலாலியில் இருந்தும், தீவகத்தில் இருந்தும் ஆனையிறவில் இருந்தும் சூட்டாதரவையும், உதவிப் படைகளையும் வழங்கக் கூடிய நிலையிலும், பலாலியில் இருந்து வான் படைகளின் உதவியைப் பெறக் கூடிய நிலையிலும், காரைநகர், காங்கேசன்துறை கடற்படைத் தளங்களில் இருந்து கடற்படை உதவியை பெறக் கூடிய நிலையிலும்– அந்த பெருந்தளம் இருந்தது.

இவ்வாறானதொரு தளத்தின் முன்னரங்க நிலைகளை விடுதலைப் புலிகளின் படையணிகள், 1993 நவம்பர் 10ஆம் திகதி இரவோடு இரவாக ஊடுருவத் தொடங்கின. மறுநாள் 11ஆம் திகதி அதிகாலை 1 மணியளவில், பெரும் சமர் மூண்டது.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் நேரடி நெறிப்படுத்தலில், புலனாய்வுத்துறை பொறுப்பாளராக இருந்த பொட்டம்மான் அந்த தாக்குதலை ஒருங்கிணைத்தார். கடல்வழி நடவடிக்கைகளை கடற்புலிகளின் தளபதி சூசையும், தரை நடவடிக்கைகளை தளபதி சொர்ணமும் தலைமை தாங்கி முன்னெடுத்தனர்.

கிழக்கில் இருந்து பெரும் படையணியுடன் சென்ற கருணா, மற்றும் அனைத்து மாவட்டத் தளபதிகளும், தங்களின் படையணிகளுடன் இந்த தாக்குதலில் பங்கெடுத்தனர். தரைவழியாகவும், கடல் வழியாகவும் படைத்தளத்துக்குள் ஊடுருவி நடத்தப்பட்டதால் அதற்கு தவளை’ என்று பெயரிடப்பட்டது.




இராணுவ முன்னரண்களை தாக்கியழித்துக் கொண்டு முன்னேறிச் செல்லும் வழக்கத்துக்கு மாறாக, முன்னரங்க நிலைகளை ஊடுருவி நிலை கொண்ட பின்னர் தொடங்கப்பட்ட தாக்குதல் அது.

ஏற்கெனவே 1992 நவம்பரில், பலாலிப் படைத்தளத்தின் கிழக்குப் பகுதியில், ஒட்டகப்புலம் தொடக்கம் வளலாய் வரையான சுமார் நான்கரைக் கிலோமீற்றர் நீளமான முன்னரங்க நிலைகள் மீதும் இதே வகையானதொரு தாக்குதலை புலிகள் நடத்தியிருந்தனர். அந்த தாக்குதலில் இருந்து அரச படையினர் பாடம் கற்றிருந்தால், பூநகரியில் பெருந்தோல்வியைத் தவிர்த்திருக்கலாம்.

பூநகரிப் படைத்தளம் மீது தாக்குதல் தொடங்கப்பட்ட குறுகிய நேரத்துக்குள்ளாகவே அதன் பிரதான பகுதிகள் புலிகளிடம் வீழ்ச்சியடையத் தொடங்கின. நாகதேவன்துறை, ஞானிமடம் கடற்படைத் தளங்கள் வீழ்ச்சியடைய, அங்கிருந்த 5 நீரூந்து விசைப்படகுகள் கடற்புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இரண்டு டாங்கிகளும் புலிகளிடம் வீழ்ச்சியடைந்ததுடன், 120 மி.மீற்றர் மோட்டார்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன. கைப்பற்றப்பட்ட டாங்கிகளில் ஒன்று விமானப்படையின் குண்டு வீச்சில் சேதமடைந்து கைவிடப்பட்டது. மற்றது புலிகளால் பத்திரமாக கொண்டு செல்லப்பட்டு இறுதிக்கட்டப் போர் வரையில் பயன்படுத்தப்பட்டது,

இந்த டாங்கினால், பல்வேறு சமயங்களில் இராணுவத்தினர் பெரும் இழப்புகளை எதிர்கொள்ள நேரிட்டது என்று ஜெனரல் கமல் குணரட்ண குறிப்பிட்டிருந்தார். புலிகளின் தாக்குதலில் படையினர் சிதறியிருந்த நிலையில் அவர்களை ஒன்றிணைக்கவோ மேலதிக உதவிகளை வழங்கவோ முடியாத நிலை காணப்பட்டது.

இந்த தாக்குதல் ஆரம்பிக்க முன்னரே பலாலி பெருந்தளத்துக்குள்ளேயும், 30 பேர் கொண்ட ஒரு கரும்புலி அணியை புலிகள் ஊடுருவச் செய்திருந்தனர். கடல் வழியாக பலாலி தளத்துக்குள் ஊடுருவிய அந்த அணியினர், பூநகரியில் தாக்குதல் தொடங்கியதும், பீரங்கிச் சூட்டு ஆதரவையோ விமானப்படையின் விமானங்கள், ஹெலிகளின் ஆதரவையோ பெற்றுக் கொள்ள முடியாது, தொலைத்தொடர்பு கோபுரத்தை தாக்கி அழித்து, வடபுலப் படைத் தலைமையகத்தை குழப்பத்துக்குள்ளாக்கும் திட்டத்தைக் கொண்டிருந்தனர். புலிகளின் இரண்டு அணிகளில் ஒன்று வழி தவறிப் போனது.

மற்றொரு அணி கரும்புத் தோட்டம் ஒன்றின் ஊடாக விமானப்படைத் தளத்தை நெருங்கிய போது இராணுவத்தினரின் கண்ணில் பட்டு விட, அங்கு நடந்த சண்டையில் 13 கரும்புலிகள் சாவடைந்தனர். ஏனையவர்கள் தாக்குதலை முன்னெடுக்க முடியாமல் தளம் திரும்பினர்.

இதனால் பலாலியில் இருந்து புக்காரா, மற்றும் சியாமாசெற்றி குண்டு வீச்சு விமானங்களும் சீனக்குடாவில் இருந்து எவ் 7 ஜெட் போர் விமானங்களும் விரைந்து சென்று– பூநகரியில் படையினருக்கு உதவியாக தாக்குல் தொடுக்க முயன்றன. ஆனால், புலிகளின் விமான எதிர்ப்பு பீரங்கிகள் விமானங்களின் தாக்குதல் ஆதரவை பெறமுடியாமல் செய்தது.

அதுபோல கடல் வழியாக உதவ முற்பட்ட கடற்படையினரை கடற்புலிகளின் சண்டைப் படகுகள் வழிமறித்து தாக்கின. கடற்கரையோரங்களில் புலிகள் நிலையெடுத்து நின்று கனரக ஆயுதங்களினால் தாக்குதல் நடத்தினர். இதனால் 11, 12ஆம் திகதிகளில் உதவிப் படைகளை தரையிறக்க முடியவில்லை.



அதேவேளை தளம் முழுவதையும் கைப்பற்றி அழிக்கும் புலிகளின் முயற்சிகளும் முழு வெற்றி அளிக்கவில்லை.

பரந்த பிரதேசத்தில் தப்பியோடியிருந்த படையினரை தேடித் தேடி அழிப்பது புலிகளுக்கு கடினமாக இருந்தது. பற்றைக்காடுகள் நிறைந்த பகுதியில் அது கடினமான காரியமாக இருந்தது. 13ஆம் திகதி அதிகாலையில் கடற்படையின் விசேட படகுப் படையணியின் தலா 15 கொமாண்டோக்களுடன் இரண்டு நீரூந்து விசைப்படகுகள், லெப்.கொமாண்டர் ரவீந்திர விஜேகுணரத்ன தலைமையில் கல்முனையில் தரையிறங்க, அதனைத் தொடர்ந்து, தலா 6 கொமாண்டோக்களுடன், டிங்கிப் படகுகள் தரையிறங்கின. அதையடுத்து கடற்படை கொமாண்டோக்களின் பாதுகாப்புடன், மேலதிக உதவிப் படைகளை தரையிறக்க முடிந்தது. இதையடுத்து புலிகள் 13ஆம் திகதி மாலை தாக்குதலை முடித்துக் கொண்டு வெளியேறினர். இந்த தாக்குதலில், ஆயிரம் படையினர் வரை கொல்லப்பட்டதாக விடுதலைப் புலிகளால் அறிவிக்கப்பட்டது. எனினும் இராணுவத் தரப்பில் 8 அதிகாரிகளும் 225 படையினரும் – கொல்லப்பட்டதாகவும், 302 பேர் காணாமல் போனதாகவும், 17 அதிகாரிகளும் 544 படையினரும் காயமடைந்தனர் என்றும் கடற்படையினர் தரப்பில், 14 கடற்படையினர் கொல்லப்பட்டு, 88 பேர் காணாமல் போயினர் என்றும் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

50 மில்லியன் ரூபா பெறுமதியான ஆயுதங்கள் அப்போது புலிகளிடம் சிக்கியதாக ஜெனரல் கமல் குணரட்ண குறிப்பிட்டிருக்கிறார். விடுதலைப் புலிகள் இந்த தாக்குதலில், 469 பேரை இழந்தனர்.

1993 நவம்பர் 14ஆம் திகதி வெளியான அரசாங்க வாரஇதழான சண்டே ஒப்சேவர், பூநகரியில் புலிகள் ஈட்டிய வெற்றி என்ற தலைப்புச் செய்தியுடன் தான் வெளியானது. அந்தளவுக்கு அது பெருந்தோல்வியாக அரசதரப்பினாலேயே ஒப்புக் கொள்ளப்பட்டது.

இந்த தாக்குதலில் ஏற்பட்ட பின்னடைவுகள் குறித்து விசாரிக்க நான்கு பேர் கொண்ட இராணுவ நீதிமன்றம் ஒன்றை அப்போதைய இராணுவத் தளபதி ஜெனரல் சிசில் வைத்தியரத்ன நியமித்திருந்தார்.


கவசப்படைப்பிரிவைச் சேர்ந்த அவர், டாங்கிகள் புலிகள் வசம் வீழ்ந்ததற்கு பொறுப்பேற்று இராணுவத் தளபதி பதவியில் இருந்து விலகுவதாக அறிவித்தார்.

அவர் நியமித்த விசாரணை நீதிமன்றம், அப்போதைய வடபிராந்திய இராணுவத் தளபதியான மேஜர் ஜெனரல் ரொஹான் தளு வத்த, யாழ். மாவட்ட இராணுவத் தளபதியாக இருந்த பிரிகேடியர் ஜாலிய நமுனி, பிரிகேடியர் லயனல் பலகல்ல, பிரிகேடியர் கெமுனு குலதுங்க, பிரிகேடியர் சாந்த கொட்டேகொட, கேணல் ரஞ்சித் டி சில்வா, லெப்.கேணல் லலித் தவுலகல ஆகியோரே பூநகரி தோல்விக்கு பொறுப்பு என குற்றச்சாட்டுகளை முன் வைத்திருந்தது.


தாக்குதல் குறித்த முன்னெச்சரிக்கை வழங்கப்பட்ட போதும் அதனை முறியடிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்று இவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுகள் கூறப்பட்டன. எனினும், இவர்கள் மீது துறைசார் நடவடிக்கைகள் எதையும் அரசாங்கம் எடுக்கவில்லை. அதனால் பிற்காலத்தில் இவர்கள் பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானியாக, இராணுவத் தளபதியாக, இராணுவத் தலைமை அதிகாரியாக, மேஜர் ஜெனரல்களாக பதவி உயர்வுகளைப் பெற்றிருந்தனர்.

பூநகரி பின்னடைவு குறித்து விசாரித்த இராணுவ நீதிமன்றத்தின் அறிக்கையில் இடம் பெற்றிருந்த சில விடயங்கள் முக்கியமானவை. நவம்பர் 11 ஆம் திகதி அதிகாலை 1.30 மணிக்கு தாக்குதல் தொடங்கி, சுமார் 15 நிமிடங்களுக்குள் பூநகரி படைத்தளத்தின் முழு கட்டளை அமைப்பும் உடைந்து விட்டது. அங்கு படைப்பிரிவுகள்,(22ம் பக்கம் பார்க்க)


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! எந்த ஒரு காரியத்திலும் சரியான முடிவுக்கு வர முடியாமல் இருந்த தடுமாற்றம் நீங்கும். சாமர்த்தியமாக எதையும் சமாளிக்கும் துணிச்சல் வரும். எதிர்ப்புகள் குறையும். தொழில், வியாபாரம் சற்று நிதானமாக நடக்கும். எதிர்பார்த்த லாபம் இருந்தாலும் தொழில் தொடர்பான செலவும் கூடும். உத்யோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்ற மான பலன் காண்பர். புதிய வேலை பற்றிய சிந்தனை அதிகரிக்கும்.





ரிஷபராசி அன்பர்களே! அதிக கோபத்தால் வீண்பகை உண் டாகலாம். அடுத்தவர் விவகாரங் களில் தலையிடாமல் ஒதுங்கி செல்வது நல்லது. ஆடம்பர செலவுகள் ஏற்படும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் குறையும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு கூடுதல் பணிச்சுமை, இடமாற்றம், அலைச்சல் போன்றவை இருக்கக்கூடும். குடும்பத்தில் மகிழ்ச்சி யான சூழ்நிலை காணப்படும். பிள்ளைகள் பெருமை சேர்ப்பார்கள்.




மிதுனராசி அன்பர்களே! காரிய ங்கள் தாமதமாக நடந்தாலும் வெற்றிகரமாக நடக்கும். தொழில் வியாபாரம் தொடர்பான நெருக்கடிகளை சந்திக்க வேண்டி வரும். புது வியாபாரம் தொடர் பான காரியங்கள் சாதகமாக முடியும். குடும்பத்தில் இருப்ப வர்களின் செய்கைகள் உங்களது கோபத்தை தூண்டுவதாக இரு க்கும். கணவன், மனைவிக்கிடையே கரு த்து வேற்றுமை ஏற்படும். பிள்ளைகளை அனுசரித்து செல்வது நல்லது.





கடகராசி அன்பர்களே! பிடிவாத த்தை விட்டு விடுவது காரிய வெற்றிக்கு உதவும். கடிதப் போக்குவரத்து நன்மை தரும் தொழில் வியாபாரத்தில் சற்று விழிப்புடன் இருப்பது நல்லது. எதிர் பார் த்த பணம் கைக்கு வர தாமதம் ஆகலாம். உத்யோகத்தில் இருப்ப வர்களுக்கு நிதானம் தேவை. சக ஊழியர்களுடன் சாமர்த்தியமாக பழகி காரிய அனுகூலம் அடைவீர்கள். குடும்பத்தில் இருந்த பிரச்னைகள் தீரும. உறவினர்கள் தேடி வருவார்கள்.




சிம்மராசி அன்பர்களே! எடுத்த முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். எண்ணியபடி செயல்களை செய்து காரிய வெற்றி காண்பீர்கள். ஆன்மிக பணிகளில் ஈடுபாடு அதிகரிக்கும். திருமண முயற்சி களில் சாதகமான பலன் கிடைக்கும். தொழில் வியாபாரம் சுமாராக இருக்கும். எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கும். நீண்ட நாட்களாக இருந்து வந்த மனக் கிலேசங்களில் தெளிவான நிலை ஏற்படும்.




கன்னிராசி அன்பர்களே! காரிய தாமதம் ஏற்படும். வீண் மனக் கவலை நீங்கும். வாகனங்களில் செல்லும்போது கவனம் அவசி யம். நண்பர்கள் மூலம் கிடைக்க வேண் டிய உதவிகள் தாமதப்படும். தொழில் வியாபாரம் திட்டமிட்டபடி சிறப்பாக நடக் கும். பழைய பாக்கிகள் வசூலாகும். எதிர் பார்த்த நிதி உதவி கிடைக்கும். அரசாங் கம் மூலம் நடக்க வேண்டிய காரியங் களில் சாதகமான நிலை காணப்படும். உத்யோகத்தில் தடங்கல்கள் ஏற்படும்.




துலாம்ராசி அன்பர்களே! எதிர் ப்புகள் மறையும். பகை பாராட் டியவர்கள் பகையை மறந்து நட்புக் கரம் நீட்டுவார்கள். நீண்ட நாட்களாக இருந்து வந்த பிரச்ச னைகள் குறையும். எதையும் செய்து முடிக்கும் சாமர்த்தியம் உண்டாகும். தொழில் வியாபாரம் சீராக நடக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். உத்தியோ கத்தில் கூடுதலாக பணியாற்ற வேண்டி இருக்கும். பதவி உயர்வு கிடைக்கலாம். குடும்பத்தில் இருப்பவர்களுடன் கோபப் படாமல் நிதானமாக பேசி அனுசரித்து செல்வது நல்லது.





விருச்சிகராசி அன்பர்களே! மன உறுதி அதிகரிக்கும். பூர்வீக சொத்துக்களை அடைவதில் இருந்த தடைகள் நீங்கும். உயர் நிலையில் உள்ளவர்களுடன் இருந்து வந்த மன வருத்தம் நீங்கும். தொழில் வியாபாரம் தொடர்பாக அலைய வேண்டி இருந் தாலும் முடிவில் லாபம் கிடைக்கும். எதிர் பார்த்த கடன் வசதி கிடைக்கும். தொழில் வியாபாரத்திற்கு புதியதாக இடம் வாங்குவீர் கள். உத்யோகத்தில் இருப்பவர்கள் அலைச் சலை, வேலை பளுவை சந்திக்க நேரிடும்.







தனுசுராசி அன்பர்களே! நீண்ட நாட்களாக இருந்த பிரச்னை குறையும். மறைமுக எதிர்ப்பு கள் நீங்கும். வாக்கு வன்மை நன்மையை தரும். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். தொழில் வியாபாரத்தில் இருந்த இடையூறுகள் நீங்கும். எதிர்பார்த்த நிதி உதவி கிடைக் கும். குடும்பத்தில் இருப்பவர்கள் எதை யும் வெளிக்காட்டாமல் இன்முகம் கொடு த்து பேசுவார்கள். கணவன், மனைவிக் கிடையே இருந்த வருத்தங்கள் நீங்கும்.




மகரராசி அன்பர்களே! முடங்கி கிடந்த காரியங்கள் அனைத் தும் வேகம் பிடிக்கும். நெருக் கடியான நேரத்தில் உறவினர் கள், நண்பர்கள் உங்களுக்கு கை கொடுப்பர். தொழில் எதிர்பார்த்த அளவு நடக்கா விட்டாலும், லாபம் குறையாமல் இருக்கும். பங்குதாரர்களுடன் இருந்து வந்த பிரச்னைகள் நீங்கும். திறமையான செயல்பாட்டால் பாராட்டு கிடைக்கும். குடும்பத்தில் எதிர்பாராத விருந்தினர் வரு கையால் வாக்குவாதங்கள் ஏற்படலாம்.




கும்பராசி அன்பர்களே! எடுத்துக் கொண்ட முயற்சிகளில் காரிய தடை தாமதம் ஏற்படும் உஷ்ண சம்பந்தமான நோய் ஏற்படும். வீண் வழக்கு விவகாரங்கள் வரலாம். எச்ச ரிக்கையாக செயல்படுவது நல்லது. பார்ட் னர்களுடன் சேர்ந்து தொழில் செய்பவர்கள் கவனமாக செயல்படுவது நல்லது. கடன் தொல்லை தலை தூக்கலாம். எச்சரிக்கை யாக இருப்பது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு அதிகாரம் கிடைக்கும்.




மீனராசி அன்பர்களே! மற்றவர் களின் உதவியால் காரிய அனு கூலம் உண்டாகும். இதுவரை இருந்த தொல்லைகள் நீங்கும். நீண்ட தூரப் பயணங்களால் லாபம் உண் டாகும். மனதில் தைரியம் பிறக்கும். வாக்கு வன்மை ஆதாயத்தை பெற்று தரும். தொழில் வியாபாரத்தில் இருப்ப வர்கள் கூடுதல் செலவை சந்திக்க நேரிடும். புதிய ஆர்டர்கள் கிடைப்பது வேகமாகும். தேவையான பணஉதவி கிடைக்கலாம். நிலுவையில் உள்ள பணம் வரும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# வரலாற்றுச் சமர் 30 ஆண்டுகள்:-

(21ம் பக்கத் தொடர்ச்சி) அல்லது பட் டாலியன்கள், கொம்பனிகள், பிளட்டூன்கள் என்று எதுவும் இருக்கவில்லை. படை யினரும் அதிகாரிகளும் மட்டும் குழப்பத் துடன் ஓடிக் கொண்டிருந்தனர். அவர்க ளுக்கு யார் நண்பன் யார் எதிரி என்று தெரியவில்லை.சங்கேத சொற்கள் கொடுக்க ப்படாததால் இருட்டில் யாரையும் அடை யாளம் காண முடியவில்லை. புலிகள் தம்மை அடையாளப்படுத்துவதற்காக வெள்ளை நிற பட்டிகளை கைகளில் அணிந்திருந்தனர். பகல் நேரங்களில் பச்சை நிற டோர்ச் லைட்களையும் மஞ்சள் கொடிகளையும் பயன்படுத்தி னார்கள்.

11ஆம் திகதி காலை 6 மணியளவிலேயே, முன்னரங்க பாதுகாப்பு நிலைகள் வீழ்ச்சி யடைந்து விட்டன. படையினர் அச்ச த்தில் தங்கள் உயிர் வாழ்விற்காக மட் டுமே போராடினர். தாக்குதல் நடப்பதற்கு முன்னர் சுமார் 400 புலிகள் முன்னரங்க நிலைகளை ஊடுருவி முகாமுக்குள் நுழைந்திருப்பார்கள் என்று நீதிமன்றம் கருதுகிறது.ரி 55 போர் டாங்கிகளே முதலில் எதிரிகளின் (புலிகள்) கைகளில் சிக்கின.

டாங்கிகள் எந்த எதிர்ப்பும் இன்றி கை விடப்பட்டன. கவசப் படைப்பிரிவு துருப் பினர் தங்கள் தனிப்பட்ட ஆயுதங்களைக் கூட இழந்தனர், ஒரு அதிகாரி தனது தொலைத்தொடர்பு கருவியையும் இழந் தார். முதல் தாக்குதலுடன், படையினர் குழப்பத்தில் சிதறி, சிறியளவிலான குழு க்களாகினர் என்று விசாரணை நீதிமன்றம் கண்டறிந்தது.

தாக்குதல் தொடர்ந்ததால் அவை இன் னும் சிறிய குழுக்களாக உடைந்தன, இறுதியில் ஒவ்வொரு படையினரும் தனக்காகவே போரிட்டனர். படையினர் உயிர்வாழ்வதற்காக மட்டுமே போராடினர். பயத்தினால் அவர்களுக்கு வேறெந்த நோக்கமும் இருக்கவில்ல என கண்ட றியப்பட்டது.

விசாரணை நீதிமன்றத்தின் கூற்றுப்படி, கட்டளை அமைப்பில் இருந்து பிரிந்த படையினர், பயத்தின் காரணமாக இரவில் எந்த இலக்கும் இன்றி துப்பாக்கிச் சூ டு நடத்தினர். இதனால் வெடிமருந்துகள் தீர்ந்து போயின. மறுநாள் அவர்கள் விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்டனர்.'' என்றும் இராணுவ நீதிமன்றம் அறிக்கை யிட்டது.

இலங்கையின் போர் வரலாற்றில் பூநகரிச் சமர் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந் தது என்பதை, இராணுவ நீதிமன்றத்தின் அந்த விசாரணை அறிக்கையே ஒப்புவிக் கிறது.

**(26 நவம்பர் 2023 மாவீரர் நாளை முன் னிட்டு இக்கட்டுரை மாவீரர்களின் வீர த்தை மீள நினைவு கொள்ளுகின்றது)**

# மீண்டும் கமரொன்:-

(16ம் பக்கத் தொடர்ச்சி) பிரிட்டிஷ் பிரதமரும் மாநாட்டில் கலந்து கொள்ளா மல், அதனைப் பகிஷ்கரித்து பிரிட்ட னின் கண்டனத்தைத் தெரிவிக்க வேண் டும் என்றே எதிர்க் கட்சியான தொழிற் கட்சியின் தலைவர் எட் மிலிபான்டும் சில லண்டன் தமிழ் அமைப்புக்களும் வற்புறுத்திய போதும்,

தமிழர்களின் உரிமைகள் மற்றும் நல்லி ணக்கம் தொடர்பில் நாம் அக்கறை கொண்டிருந்தால் அதனை அங்கு சென்று வெளிச்சமிட்டுக் காண்பிப்பது தான் சரியானது. வீட்டிலிருந்து அத னைச் செய்ய முடியாது என்று உறுதி யான பதிலளித்தார் டேவிட் கமரொன்.

தான் யாழ்ப்பாணம் செல்லவேண்டும் என்பதனையும் இலங்கை அரசுக்கு அவர் தெரிவித்திருந்தார். யாழ்ப்பாணம் சென்று பொது நூலகத்தில் சில அரசி யல் தலைவர்களைச் சந்தித்தவர், ஆறு பத்திரிகையாளர்களை இழந்த 'உதயன்' பத்திரிகை அலுவலகத்துக்கும், சுன்னாக த்தில் சபாபதிப்பிள்ளை அகதிகள் முகா முக்கும் சென்று திரும்பிய பின்னர், கொழும்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வையும் சந்தித்த மறுநாள் (நவம்பர்16), மாநாட்டு மண்டபத்தில் அவர் நடாத்திய பத்திரிகையாளர் மாநாடு, மாநாட்டையே ஆட்டமுற வைத்தது.

மார்ச் மாத முடிவில் விசாரணை ஒன்று முடியவில்லை என்றால், ஐ. நா. மனித உரிமைகள் சபையில் நான் எமது நிலைப்பாட்டைப் பயன்படுத்தி, ஐ. நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் செயல்பட்டு முழுமையான, நம்பகமான, சுதந்திரமான சர்வதேச விசாரணை ஒன்றுக்கு அழைப்பு விடுப்பேன் என் பதை மிகத் தெளிவாக கூறி வைக்கி றேன் என்று அறைந்து கூறி அவர் அங்கிருந்து சென்ற போது திரண்டிரு ந்த உள்ளூர், வெளியூர் பத்திரிகை யாளர்களிடையேயிருந்து கிளம்பிய ஒரு பிரபல கொழும்பு ஆங்கில தினசரி ஆசிரியரின் குரல், "Bloody Prime Minister'' என்று ஆவேசத்துடன் ஒலித் தது.

ஜனாதிபதியுடனான சந்திப்பில் டேவிட் கமரொன் நல்லிணக்கத்துக்கும், தமிழர் களுக்கான அதிகார பரவலாக்கலுக்கும் அதிக அளவில் செயல்பட வற்புறுத்திய போது யுத்தம் முடிந்து நான்கு ஆண்டு களே ஆகிறது என்றும், நாடு எதிர் கொள்ளும் பிரச்சனைகளை சமாளிக்க அதிக காலம் தேவைப்படுவதாகவும் தெரிவித்திருந்த ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ, டேவிட் கமரொனின் பத்திரிகை யாளர் மாநாட்டின் பின்னர், 'கண்ணாடி வீட்டிலிருந்து கல்லெறிய வேண்டாம்' என்று தெரிவித்திருந்தார்.

ஐரிஷ் பிரச்சனையை எண்ணத்தில் கொண்டு அவர் இதனைத் தெரிவித் திருந்தார். ஜே. ஆர். ஜயவர்த்தன காலத்தில் கொழும்பில் நடந்த பொதுநல நாடுகளின் அமைச்சர்கள் மட்ட மாநாட் டில், அவரும் இப்படி பிரிட்டிஷ் பிரதி நிதிகளுக்கு தன்னுடைய தொடக்க உரையில் நேரடியாகவே கூறினார்.

ஆக இலங்கையில் பிரதமர்கள் எதிர்க் கட்சித் தலைவர்களாவதும் பின்னர் பிரதமர்களாவதும் தான் வழக் காக விருக்கையில் இப்போது ஜனாதிபதிகள் பிரதமராகிறார்கள். ஆனால், இது தமிழர் களுக்கானதல்ல.

# வட்டுக்கோட்டை இளைஞன் பொலிசாரின் அடி..

(8ம் பக்கத் தொடர்ச்சி) சுவிஸர்லாந்து ஆழ்ந்த கவலையில் இருப்பதாக தனது எக்ஸ் (டுவிட்டர்) தளத்தில் பதிவிட்டுள்ளார். மேலும் காவலில் தவறாக நடத்தப்பட்ட தாகக் கூறப்படும் எந்தவொரு வழக்கும் இலங்கை அதிகாரி களால் பாரபட்சமின்றி விசாரிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை வட்டுக்கோட்டை பொலிசாரின் தாக்குதலில் உயிரிழந்ததாக கூறப்படும் இளைஞரின் மரணம் தொடர்பில், வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டுள்ளது. யாழ்ப்பாண நீதவான், யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு நேரில் சென்று அங்குள்ள அதிகாரிகளிடம் வாக்குமூலங்களை பதிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இளைஞரின் சடலம் தொடர்பான உடற்கூற்று பரிசோதனைகள் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில், சட்ட வைத்திய அதிகாரி மயூரதன் தலைமை யில் மேற்கொள்ளப்பட்டது. அதன் போது நீதவான் வைத்தியசாலைக்கு நேரில் சென்று சட்ட வைத்திய அதிகாரியிடம் பரிசோதனைகள் தொடர்பில் கேட்டறிந்தும் கொண்டார்.

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases



Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.


## *At Need Funeral Arrangements*
We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com













# ராஜபக்ஷாக்களின் குடியுரிமையைப் பறிக்க மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியம் - நீதி அமைச்சர்



பொருளாதார குற்றவாளிகளாக தீர்ப்பளிக்கப்பட்டுள்ள மஹிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பசில் ராஜபக்ஷ உள்ளிட்டோரின் குடியுரிமையை இரத்து செய்வதற்கு அமைச்சரவையின் அனுமதியும், நாடாளுமன்றின் மூன்றிலிரண்டு பெரும்பான்மையும் அவசியம் என நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். நாடாளுமன்றில் உரையாற்றிய அவர்

நாட்டின் பொருளாதாரத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் விதத்திலோ, பொருளாதாரத்தை சீர்குலைக்கும் வகையிலோ அல்லது மோசடியில் ஈடுபடுவதற்காகவோ நிதியை பயன்படுத்தினால் அதற்கு நிறைவேற்று அதிகாரம் பொறுப்புக்கூற வேண்டும். அந்தவகையில் நீதிமன்ற தீர்ப்புக்கு நிறைவேற்று அதிகாரம் கட்டுப்பட வேண்டும். எனவே பொருளாதார நெருக்கடிக்கு காரணமானர்கள் குறித்து தேவையேற்படின் விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், இதுதொடர்பாக விசாரணை நடத்த ஜனாதிபதிக்கும், அமைச்சரவைக்கும் அதிகாரம் உள்ளது. குற்றம் சாட்டப்பட்டவர்கள் தவறிழைத்துள்ளனர் என ஆணைக்குழு பரிந்துரைத்தால் அதனை அடிப்படையாகக்கொண்டு குறிப்பிட்ட நபர்களின் குடியுரிமையை 7 ஆண்டுகளுக்கு இல்லாது செய்ய முடியும். இதற்கான யோசனையை அமைச்சரவையின் அனுமதியுடன் நாடாளுமன்றித்திலும் முன்வைக்கலாம். அதனை நாடாளுமன்றில் நிறைவேற்றுவதற்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலம் அவசியம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதற்கு முன்னதாக உயர்நீதிமன்றத்தால் பெயரிடப்பட்ட ராஜபக்ஷர்கள் உள்ளிட்ட பொருளாதார கொலையாளிகளின் குடியுரிமைகள் இரத்துச் செய்யப்பட வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ, பாராளுமன்றத்தில் கோரினார். நீதித்துறையின் சுதந்திரத்தைப் பிரதிபலித்து நாட்டின் பொருளாதாரத்தை வங்குரோத்தாக்கிய பொருளாதாரக் கொலையாளிகளை அம்பலப்படுத்தி வரலாற்றுத் தீர்ப்பை உயர் நீதிமன்றம் வழங்கியிருந்தாலும் இத்தரப்பினர் இன்னமும் அரச அனுசரணையின் கீழ் சலுகைகளை அனுபவித்து தங்கள் வழமையான சுகபோக வாழ்க்கையை வாழ்ந்து வருகின்றனர் என்றும், இந்த முடிவை அவர்கள் மதிக்கவில்லை அவர்களின் தவறான முடிவுகளுக்கு அனைத்து இலங்கையர்களுமே விளைவுகளை ஈடு கட்ட வேண்டியுள்ளது என்றார்.

இவர்களுக்கு எதிராக அரசாங்கம் எடுக்கப் போகும் தீர்மானம் தொடர்பில் மக்கள் விழிப்புடன் இருப்பதாகவும், எனவே அரசாங்கத்தால் எத்தகைய மெத்தனமான போக்கு ரீதியான நடவடிக்கைகளையும் எடுக்க முடியாது என்பதனால் அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறி. த்து அறிய வேண்டியது அவசியம் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

மஹிந்த ராஜபக்ஷ,கோட்டாபய ராஜபக்ஷ, பசில் ராஜபக்ஷ,பி. பி.ஜயசுந்தர, அஜித் நிவார்ட் கப்ரால்,எஸ்.ஆர். ஆடிகல, டபிள்யூ .டி.லக்ஷ்மன், சமந்த குமாரசிங்க மற்றும் நிதிச் சபை இணைந்து இந்த வங்குரோத்தை மேற் கொள்ள ஏற்பாடு செய்திருந்தமை தெரிய வந்துள்ளது. அவர்களுக்கு எதிராக என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் கேள்வியெழுப்பினார்.

இந்தத் தீர்ப்பின் பிரகாரம் அடிப்படை உரிமைகள் மீறப்பட்ட நபர்களுக்கு எதிரான விடயங்களை ஆராய்ந்து அறிக்கையிடவும், குறித்த நபர்களுக்கு எதிராக தேவையான நடவடிக்கை எடுப்பதற்கான பரிந்துரைகளை வழங்குவதற்காக விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவை உடனடியாக நியமித்து இந்த பொருளாதாரக் கொலைகாரர்களின் குடியுரிமைகள் இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

